# வேர்கள் ROOTS

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக காலாண்டு இதழ்
LONDON TAMIL CATHOLIC QUARTERLY
LONDON TAMIL CATHOLIC CHAPLAINCY, 304, GARRATT LANE, EARLSFIELD, SW 18 4EH, U.K,
E-Mail: Verkalgb@gmail.com, Website: www.tamil-rcchaplaincy.org.uk Tel: 02088706257

சிறப்பிதழ் - **Special Edition** 20.06.2023 விலை : £1

# CELEBRATING A LEGENDARY ICON

75
1948
2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியைக் கண்ணாகக் கருதியவர்
# எம் ஆயர் ஜஸ்ரின் ஆண்டகை

புனித ஹென்றியரசர் கல்லூரியால் வெளியிடப்பட்ட அருட்தந்தை அவர்களின் யூபிலிமலரில் ஆயரின் காலஞ்சென்ற தாயார் எமிலி தங்கமலர் அளித்த பேட்டியிலிருந்து ஒரு சில வரிகள்...

"அவர் கல்வித்துறையில் முன்னேறிப் பட்டங்கள் பெற்றதும் நாம் எதிர்பார்க்காத ஒன்று. யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு அதிபரானதும், நாம் மிகவும் மனமகிழ்ந்தோம். எந்நேரமும் அவர் சிந்தனை, அவர் செயல் எல்லாம் பாடசாலை பற்றியதே. பாடசாலையின் வளர்ச்சி பற்றியே எங்களுடன் அளவளாவுவார். அவர் சிறந்ததொரு கல்விமானாக, பண்புமிக்க ஒரு குருவாக, ஒரு பாரிய நிறுவனத்தைக் கட்டிக்காத்த எதிர்கால நற்சந்ததியினை உருவாக்கும் அதிபராக விளங்குவதில் என்மனம் மிகவும் பெருமை கொள்கிறது."

மேற்கூறப்பட்ட வரிகள் அத்தாய் மனதில் மகன் கல்விக்காகச் செய்த பணிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது. உண்மையில் கல்விமான்கள், கல்வியியலாளர்கள் எமது ஆயரின் கல்விப்புலம், கல்விச் செயற்பாடுகள் பற்றி அவரின் கல்வித்துறை சார்ந்த தாகம் பற்றி அறியாமலில்லை.

**கல்வித்துறை சார்ந்து அவர் கொண்டிருந்த பதவிகளை இங்கு வரிசைப்படுத்தலாம்:**

01.06.1976 - 30.08.1979 - புனித ஹென்றியரசர் கல்லூரி, 01.09.1979 - 01.09.1980 - Dubline Research Centre, 05.09.1980 - 07.09.2002 - புனித ஹென்றியரசர் கல்லூரி, 21.02.1989 - 07.09.2002 - அதிபர், ஹென்றியரசர் கல்லூரி, 28.01.2002 - 31.12.2007 - அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி

**பத்திரிசிய பயணத்தில் எனது பார்வையில் :**

2002ம் ஆண்டு முதல் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆயர் அவர்கள் அதிபராக 2007ம் ஆண்டுவரை பணிபுரிந்தார். இக்காலப்பகுதியில் கல்லூரியின் வளர்ச்சிக்காக அவர் செய்த பணிகள் பற்பல. புதிய அதிபரின் வருகையால் முன்னர் பத்திரிசிய கல்லூரியில் இருந்த மேன்மையான, உன்னதமான நிலை மேன்மேலும் மெருகூட்டப்பட்டது. கல்வித் தத்துவத்தில் உள்ளடக்கப்பட்டவாறு கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளுக்கு மேலதிக கல்விச் செயற்பாடுகளில் அனைவரின் கவனம் ஈர்க்கப்பட்டது. கழகங்கள், சங்கங்களின் செயற்பாடுகளின் ஊடாக மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். ஆசிரியர்களின் நலன்களில் அதிக கவனம் எடுத்துச் செயற்பட்டார்.

கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம் என உணரப்பட்டதுதான், அது மென் மேலும் உணர வைப்பதில் வெற்றி உண்டு என்பதை ஆயர் அவர்கள் உணர்ந்து அவர்களுடனான சந்திப்புக்களைத் துரிதப்படுத்தினார். சந்திப்புக்கள் சடுதியாகச் சரியவில்லை நிமிர்ந்தன. புதிய கட்டட நிர்மாணத் துறைக்கான நிதி சேகரிப்பு, மாணவர்களின் வளர்ச்சி நிதி என்று நிதி சேகரிக்கப்படும் பணியில் பழைய மாணவர்களை ஒன்று திரட்டினார். சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கு இணங்க அதிபர் தந்தையரின் இச் செயற்பாடு கல்லுரியின் வளர்ச்சிக்கு பேருதவியாக அமைந்தது எனலாம்.



கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதில் கட்டிடங்கள் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்கின்றன என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் கல்லூரியின் நுழைவாயிலை அழகுற வடிவமைத்து நிறுவினார். வண. பிதா. லோங் அடிகளாரின் நினைவாக நிறுவப்பட்ட கட்டடத் தொகுதியை நிறைவாக்கி வெற்றி கண்டார். இது தவிர மாநாட்டு மண்டபம், புவியியல் அறை, மல்ரி மீடியா அறை, வகுப்பறைகள் என இவரது எண்ணத்தில் உதயமானது, பல உருவாக்கம் பெற்றன. இவர் ஆயரான பின் கார்டினர் கட்டடம், விடுதிக்கான மாடிக் கட்டடம் எனபன உருவாவதில் முன்னின்று உழைத்தவராக விளங்குகிறார்.

கல்வியும் விளையாட்டும் ஒரு மாணவனின் இரு கண்கள் போன்றவை என்பதில் நம்பிக்கை கொண்ட இவர், கல்வியைப் போன்று விளையாட்டுத் துறையையும் மேம்படுத்தத் திட்டங்கள் பல வகுத்தார். எமது கல்லூரி விளையாட்டுத்துறையில் பல சாதனைகளைப் புரிய களம் அமைத்துத் தந்தார். கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் எமது கல்லூரியின் அணியை முதன் முதலில் பங்குபெறச் செய்தார். இவரது பணிக் காலத்தில் 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி "மைலோகப் (Milo Cup)" நடாத்திய போட்டியில் வென்று பிரிவு 2 சம்பியன் ஆனது. 2005 இல் சமாதானத்துக்கான உதைபந்தாட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போட்டியில் எமது கல்லூரி 2ம் இடத்தைப் பெற்றது. 17 வயதுப் பிரிவினருக்கான "அஸ்ரா கப்" கிரிக்கெட் போட்டியில் எமது அணி சம்பியன் ஆனது. ரெனிஸ் விளையாட்டு மீண்டும் தலை தூக்க யூனியர், சீனியர் அணிகள் வடமாகாணப் பாடசாலைகள் மட்டத்தில் வெற்றிவாகை சூடியது இவரது காலத்திலேயாகும்.

மாணவர்களின் நலன் கருதி கணனிக் கூடம், ஆங்கிலக் கூடம் ஆகியவை நிறுவப்பட்டன. எமது கல்லூரி வரலாற்றில் இவரது காலத்திலேயே ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுக் கற்பித்தல் அனுபவங்களைப் பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. நவீன கற்பித்தல் நுட்பங்களை அறிந்து கொள்ளும் நோக்குடன் 2005ம் ஆண்டு சி. ஸ்ரனிஸ்லாஸ், D.C.C. சந்தியாப்பிள்ளை ஆகிய ஆசிரியர்கள் இந்தியாவில் உள்ள தஞ்சாவூர் கிறிஸ்தவ கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் இவரது கல்லூரியில் ஆங்கில மொழி மூலமான கற்கைநெறி அறிமுகப் படுத்தப்பட்டு, மேற்கத்தையநாடுகளிலிருந்தும் ஆசிரியர்கள் இங்கு வரவழைக்கப்பட்டனர். 2003 ஆம் ஆண்டு அயர்லாந்திலிருந்து செல்வி. கிளையா அவர்களும், அவுஸ்ரேலியாவிலிருந்து செல்வி. ஜெனிஸ்லா சவிரிமுத்து அவர்களும், 2004ம் ஆண்டில் அவுஸ்ரேலியாவில் இருந்து செல்வி. சுகிர்தா அவர்களும் எமது கல்லூரிக்குச் சமூகமளித்து ஆங்கில மொழி கற்பித்தலில் ஈடுபட்டிருந்தனர். 2007ம் ஆண்டில் ஆங்கில மொழி மூலமான கற்கைநெறி மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 100 வீதமானவர்கள் சித்தியெய்தி எமது கல்லூரிக்குப் புகழ் சேர்த்தமையும், செல்வன் எம். மதுசன் 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசியரீதியில் 2ம் இடத்தைப் பெற்றமையும் தந்தையவரின் காலத்திலேயாகும்.

2007ம் ஆண்டு அதிபராக இருந்த ஆயர் அவர்கள் அயர்லாந்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது டப்ளின் கிறிஸ்தவ அருட் சகோதரர்களைச் சந்தித்தபோது எமது கல்லூரியின் வளர்ச்சி பற்றிய திட்டங்களை முன்வைத்தார். டாக்டர் மேரி. ரொமி அவர்கள் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வந்தார். அத்துடன் C.B.C அதிபரான திரு. பக்கிற் ரிங் அவர்களும் எமது கல்லூரியின் கல்வி முயற்சிக்கு உதவ முன்வந்தார். ஆசிரியர்கள் பரிமாற்ற செயற்திட்டத்தின் கீழ் கிளாயா அவர்கள் அயர்லாந்திலிருந்து இங்கு வருகை தந்து, எமது கல்லூரியில் சில வருடங்கள் பணியாற்றினார். எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியை திருமதி C.Y. இராம கிருஷ்ணன் அவர்கள் இத்திட்டத்தின் கீழ் அயர்லாந்திலுள்ள CBC இல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டார்.

நினைத்ததை முடிக்கும் செயற்றிறன் இவரிடம் பரிபூரணமாக நிறைந்திருந்தன. பேச்சாற்றல், நேரம் தவறாமை ஆகிய நற்பண்புகள் அவரோடு ஒட்டிப் பிறந்தன.

பலரையும் ஈர்த்துப் பணிபுரிகின்ற வேலைகளைப் பூர்த்தி செய்கின்ற ஆளுமைத் தன்மை அவரிடம் அகலமாகவே காணப்பட்டன. குறித்த நேரத்தில் உறுதியான முடிவெடுப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். பதட்டமின்றி எதனையும் அமைதியாகச் சிந்தித்து ஆசிரியர்களின் ஆலோசனையுடன் செயலாற்றினார். குறித்த பொறுப்புக்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்களை நியமித்து கல்லூரிச் செயற்பாடுகள் செயற்றிறன் மிக்கதாகிட வழிவகுத்தார். பிரச்சினைகளை, சவால்களை எதிர்நோக்கியபோது புன்னகை வதனத்துடன் அவற்றை எதிர்கொண்டு, தீர்வு கண்டார். பிரச்சினைகள் அவரைக் கண்டு பின்வாங்கின. முரண்பாடுகள் அவரைக் கண்டு முண்டியடித்து அகன்று போயின. ஆளுமையின், அமைதியின் அன்பனாக அவரைக் கண்டு அனுபவித்தாள் எமது கல்லூரித் தாய்.

ஆயர் அவர்கள் எமது கல்லூரி அதிபராகப் பணிபுரிந்த போது யாழ். மறை மாவட்டத்தின் குரு முதல்வராக அறிவிக்கப்பட்டார். கல்லூரியில் அவரது சேவைக் காலம் நிறைவு பெறுவதற்கு முன்பே தனது பணியை இன்னொருவருக்கு வழங்கிச் சிறப்பித்தார். மற்றவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையிலேயே அவரது இச் செயற்பாடு அமைந்திருந்தது. பதவியைத் தொடர்ந்தும் பற்றிக் கொண்டிருக்காது, ஏனையோருக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் மனநிலை அவருக்கே உரித்தான தனிச்சிறப்பாகும்.

தந்தை அவர்கள் ஆயராகத் திரு நிலைப்படுத்தப் பட்டதன் பின்னர் சமய, சமூக அக்கறை கொண்டவராக விளங்கினார் என்பதற்குப் பல சான்றுகளை முன் வைக்கலாம். அல்லைப்பிட்டியில் சர்வதேச பாடசாலை உருவாக்கம் பெறுவதற்கு ஆயர் அவர்களின் பங்களிப்புக் காத்திரமானது. இந்தியாவிலிருந்து மொன்பேட் சபையின் அருட் சகோதரர்களை இங்கு வரவழைத்து இத்திட்டத்தினை நிறைவேற்றினார். இப்பாடசாலை ஆங்கிலவழிக் கல்விக்கூடமாக விளங்குவதனால் தீவுப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி, ஏனைய மாணவர்களுக்கும் இத்திட்டம் நன்மை பயக்கும் என எண்ணலாம்.

வறுமையின் சுமையோடு வாழ்ந்து கல்விகற்கத் தகுதியான மாணவர்களுக்குப் பங்குத் தந்தையர்களின் ஆதரவுடன் அவர்களது கல்வி வளர்ச்சிக்கான நிதியுதவியைப் பெற்றுக் கொடுப்பதில் ஆயர் அவர்க ளின் பணி சிறப்பான முயற்சியாகும். இப்பணியை அவர் கியூடெக் நிறுவனத்தின் ஊடாகவும் மேற்கொண்டு வருகின்றார். பெற்றோரை இழந்த வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வும் பல நிறுவனங்களின் ஊடாக உதவிகளைப் பெற்று உதவி வருகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. பெற்றோர் அற்ற வறிய மாணவர்கள் கல்வியைக் கை விட்டுத் தொழிலில் ஈடுபட நேர்ந்த போது, அவர்களைச் சந்தித்து மீளவும் அவர்களின் கல்விக்காக முயற்சிகள் பல செய்தார்.

தந்தையர்களின் வழிநடத்தலில் பாடசாலைகள் வளர வேண்டும் என்பதற்காகவும், மாணவர்களின் உருவாக்கத்திற்கு அருட்பணியாளர்களின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம் என்பதை உணர்ந்த இவர், பாடசாலைகளுக்கு அருட்பணியாளர்களை உள்ளீர்க்கும் உத்தியைக் கண்டுபிடித்து அதில் வெற்றியும் கண்டார். அருட்பணியாளர்களை ஆசிரியர்களாகவோ அல்லது அதிபர்களாகவோ நியமிக்க இவர் செயலாற்றும்விதம் பாராட்டப்பட வேண்டியதொன்றே.

மூன்றாம் நிலைக் கல்வி மூலம் பலருக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தரும் நோக்கில் யாழ். பற்றீசியன் நிறுவனத்தை சலேசிய சபையிடம் கையளித்து, அதன் மூலம் மூன்றாம் நிலைக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளார். கரடிப்போக்கிலும், முழங்காவில் பிரதேசத்திலும் தொழிற் பயிற்சிக் கூடங்களை ஆரம்பித்து, எமது பிள்ளைகள் எதிர் காலத்தில் நல்லதொரு வாழ்வை அமைத்திட ஆவண செய்துள்ளார்.

**திரு. சி. ஸ்ரனிஸ்லாஸ்**
ஓய்வுநிலை ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி

முடிவாக "தந்தை என்னை அறிந்திருக்கின்றார். நானும் தந்தையை அறிந்திருக்கின்றேன். நான் என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கின்றேன்" (யோவான் 10:15). என்ற இறை வார்த்தைகளுக்கு ஏற்ப உங்கள் பணி மேம்பட இந்த நல்ல நாளில் வாழ்த்துகின்றோம். சவால்கள் உங்கள் முன் சரணடையவும், வெற்றிகள் உங்களை வந்தடையவும் எமது பாராட்டுக்களைக் கூறி, ஆண்டவர் இயேசுவின் வழிநடத்துதலிலும் தேவதாயின் பாதுகாப்பு உங்களுக்கு என்றும் எப்போதும் கிடைக்க ஆசிகள்கூறி வாழ்த்துகின்றோம். வாழ்க, வளர்க உங்கள் பணி ●

# ஒரு மௌனப்புரட்சியில் ஆயர்

## பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

ஆயர் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் 75 வயது அகவையை நோக்கிய பயணத்தில் அவர்களது நெடிய கால விரிப்பில் குருவாக, ஆயராக தூர நோக்குடன் மறை மாவட்ட வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளின் ஒரு சில நீக்க முடியாத நினைவுகளை மீட்டுப் பதிவிடுவது பொருத்தமாகும்.

வெளியுலகில் நாம் காணும் அதிசயப் படைப்பின் காரணியாக நிலத்தடியில் நடக்கும் விருட்ச விதைகளின் மௌன மடிப்புகள் இயற்கைத்தாயின் செய்தி. குறுகிய கால எல்லைக்குள் மௌனத்தில் உறைந்துள்ள ஆயர் அவர்களின் பணிகள் பாராட்டுதற்குரியது.

ஆயர் தந்தை அவர்களுக்கு முன் சென்ற மூன்று ஆயர்களின் ஒரு சில பணிசார் குண நலன்கள் இவரிலும் ஊடாடி இருக்கிறது புலனாகிறது. அது மாவட்ட வளர்ச்சிக்கான தொடர் தேவை என்றும் நோக்கலாம்.

அமரர் ஆயர் ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை அவர்கள் வன்னி, மன்னார்ப் பகுதிகளின் மூலைமுடுக்குகளில் பள்ளிகளைத் தொடக்கி, கத்தோலிக்க விழுமியங்களை வளர்ப்பதில் ஆவல் கொண்டிருந்ததுபோல, ஆயர் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் போரின் தாக்கத்தினால் நலிவடைந்திருக்கும் கல்வியை வளர்த்தெடுப்பதற்குத் தனது ஆயத்துவ பணிக்கு முன்னுரிமைகொடுத்து. இதன் விளைவாக பல குருக்கள் ஆசிரிய பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டு பின்தங்கிய கிராமங்களில் பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் பொறுப்பெடுத்த ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள் பாரிய நிதி நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருந்தும் தனது நிர்வாகத் திறனால் நிதி நிலைமையை நெறிப்படுத்தியது போன்று போரின் தாக்கத்தினால் அழிவுக்குள்ளான ஆலயங்களையும் குருமனைகளையும் அமைத்தது மட்டுமல்ல மக்கள் தேவை கருதி புதிய ஆலயங்களை உருவாக்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களின் காலம் போர் மேகங்களினால் சூழ்ந்திருந்தது. இக்கட்டான சூழலில் மறைமாவட்டத்தில் நிதி நிலமையை சரியான பாதையில் கொண்டு சென்றுள்ளவிதத்தில் ஆயர் தந்தை யஸ்ரின் அவர்களும் இலங்கை பாரிய பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கும் இக்கட்டான சூழலிலும் மறைமாவட்ட நிதிநிலைமையை பலப்படுத்தியுள்ளதும் நோக்கற்பாலது.

**ஒரு பன்முக ஆளுமை:**

மனித உறவுகளுக்கு மதிப்பு. "குருதியில் நம்பிக்கை வைப்பதுதான் எனது பெருஞ்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமயம், ஞானத்தை விட உடல்சார் அறிவு உண்மையானது. எமது உள்ளம் பிழை போகலாம் ஆனால் எமது குருதி சொல்வதும், உணருவதும், நம்புவதும் பொய்க்காது" கூறுகிறார் ஜி.பி லோறன்சு என்னும் அறிஞன்.

தலைமை ஆயன் என்ற மட்டில் அமைப்பை யும் அதேவேளையில் மனித உறவுகளைக் கட்டிக் காப்பதும், இது இரண்டுக்குமான வெளியை அகலப்படுத்தாமலும், சுருக்காம லும் சமச்சீருடன் கொண்டு செல்வது கடின மாயிருப்பினும் இறையரசின் முக்கிய விழு மியமான மனிதத்திற்கு முன்னுரிமை கொடுத்து, மனித உறவை பாதுகாத்துத் தனது பணியை ஆயர் தந்தை அவர்கள் நகர்த்து வது சிறப்பு அம்சமாகும். அமைப்புகள் மனிதத்தைப் பெலவீனப்படுத்த முடியாது. ஓர் அருட்பணியாளர் கூறினார் 'அறநெறியில் வழி நடாத்துவதற்கு அறச்சினம் கொண்டு உரைத்தாலும், அவரிடம் மனிதம் குடி கொண்டிருந்தது'. விழுந்தால் தூக்கி விடு வதும், நலிந்தால் தட்டிக் கொடுப்பதும், தடவை கள் பல மன்னிப்பு அளிப்பதும் திருந்துவ தற்கு வாய்ப்புகள், வசதிகள் கொடுத்து மந் தைக்கு வெளியில் தூக்கிஎறியாமல் உள்ளே வைத்து அரவணைத்து நடத்துவது ஆயரின் இயல்பாகும்.

**தலைமைத்துவப் பண்பு:**

நல்ல தலைவருக்கு சில முடிவுகள் எடுப் பதற்குத் துணிவு தேவை. "கடவுள் நமக்குக் கோழை உள்ளத்தினையல்ல வல்லமை யும் அன்பு நிறைந்த உள்ளத்தையே வழங் கியுள்ளார் (2 திமோத் தேயு 1:7) சிறந்த தலைவர்கள் எப்போதும் தீரமிக்கவர்க ளாக இருப்பர். தன் முனைப்புகளிலும் முயற்சி களிலும் ஆர்வம் காட்டுவர், தோல்வியடைந் தாலும் கற்றுக் கொள்ளும் அனுபவமாகவே பார்ப்பர் என்பது ஆயர் அவர்களின் வாழ் வியலாக இருக்கிறது.

**பணிகளைப் பகிர்தல்:**

ஒரு சிறந்த தலைவர் தனது பணிகளைப் பகிர்ந்து அடுத்தவர்களைப் பயிற்றுவிப்பது ஆயருக்கு நிகர் அவரே. எல்லாவற்றையும் தாங்கள் செய்து முடிக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் மறைமுகமாகத் தாங்கள் எவரையும் நம்புவதில்லையென்று கூறுவார் கள் எல்லாவற்றிக்கும் கவனம் செலுத்து வதால் தங்கள் எல்லையைக் குறுக்கிக் கொள்வார்கள் வெற்றிகரமானவர்களின் திற மைகளை கணக்கில் எடுத்து பயன்படுத்து கிறார்கள் தங்களுடைய இல்லாக் குறையை பூர்த்திசெய்கிறார்கள் இது ஆயர் அவர்களுக் குப் பொருந்தும்.

**நல்லிணக்கத்தில் நிதானம்**

வெளிப்படையாக அரசியல் பேசா விட்டாலும் அதையும் அவருக்கு உரித்தான முறையில் அவரைச் சந்திக்கவரும் வெளிநாட்டுப் பிர முகர்கள், முக்கிய பிரபல்யங்களுடன் மிகத் தெளிவாகத் தலைமுறைதலை முறையாக அரசியல் தீர்வின்றித் தமிழ் மக்கள் சந்திக்கும் அவலங்கள், போர் விட்டுச் சென்ற அழிவுகளையும் அதற்கான தீர்வு முறை களையும் எடுத்துரைப்பார். அன்றாட நாட்டு நடப்புக்கள் அரசியல் களங்களை யாழ். மறை மாவட்ட நீதி சமாதனத்திற்கான ஆணையம் ஊடாகச் செயற்படுத்தி வருவது அவருடைய வழிமுறையாகும். மக்கள், குருக்கள் துறவி கள் பாதுகாப்புக் கருதி, பாதுகாப்பு படையின ருடன் நிதானமாக நடப்பதும் அவதானிக்க முடிகிறது.

**ஒரு சில மைல்கற்கள்**

மொன்போட் பன்னாட்டுக் கல்வி நிறுவகம். கல்விப் புலத்தில் நான்கு தசாப்தகாலமாகப் பணிபுரிந்து நன்கு தேடியும் உரையாடியும் பெற்ற அறிவில் சமூகத்தின் பொருளதாரப் பின்னடைவையும் வாழ்வாதாரத்தையும் அவதானித்து இலங்கையின் போட்டிக் கல்வி யையும் வெளிநாட்டுக் கல்வியின் தரா தரத்தை ஊடறுத்து செயற் படுவதற்கு ஏற்ற தாக ஆழ்மனதில் வெளியான பிரசவம்தான் மொன்போட் கல்விநிறுவகம். இந்தியாவில் 100 க்கு மேற்பட்ட கல்லூரிகளைத் திறம்பட நடாத்தும் மொன்போட் அவையினரைத் தேடிப் பிடித்து இங்கு அழைத்து பின் தங்கிய இடமாகிய அல்லைப் பிட்டியில் காணி வழங்கி பல வாய்ப்புக்கள் வசதிகள் கொண்டு உரு வாக்கியது அவர் பணி யின் முக்கிய மைல்கல். நலிவடைந்திருக்கும் எம் மக்களின் வாழ்வாதாரத் திற்கு இத்திட்டம ஓரளவு முண்டு கொடுக்கும் என்ப தில் சந்தேகமில்லை!

**'மறைநதி' ஊடகமையம்**

காலத்துக்கேற்ற படைப்பாக 'மறைநதி' கத்தோலிக்க ஊடக மையத்தை அதன் ஒரு அலகாக 'மறையலை' தொலைக்காட்சி தொடக்கி யதும் குறிப்பிடப்பட வேண் டியது. செய்திகள் பரிமாற் றத்தில் இருந்து சிந்தனை உருவாக்கம் வரை ஊட கங்களின் ஆதிக்கம் எங் கும் வியாபித்து இருக்கிறது.

ஒரு புறம் ஊடகங்களின் வியக்கவைக்கும் வளர்ச்சி யும் மறுபுறம் மனித மேம் பாட்டை திசைதிருப்பும் ஊடகங்களின் இன்றைய நிலை. இத்தகைய ஊடகங்களால் இறை வார்த்தை யும் கூட சுருக்கப்படும் திசை திருப்படும் அபாய மும் அன்றாட எதார்த்தங்களே. மனிதன் கட்டுப்படுத்த வேண்டிய மக்கள் ஊடகங் கள் மக்களைக் கட்டுப்படுத்துவது இன்றைய நிலை. இத்தகைய சூழலில் இறையியல் தேடலை நோக்கி மட்டுமல்ல வாழ்வியல் பெறுமானங் கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர் களின் மாற்றுச் சிந்தனை களை விரல் நுனியில் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாகக் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஓர் ஊடக நிறுவகம்!

இங்கு ஓர் ஆளுமையின் பணிவாழ்வுப் பின்புலத்தில் 'மௌனம்' என்ற வார்த்தை சிலாகிக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் அநீதிகள் இடம்பெறுகையில் மௌனம் சாதிப்பது முறையானது என்றுபொருள்படக்கூடாது.

தொடரும் பணிகள் நிறைவடைய உடல் உள வளங்கள் அதற்கு ஈடுகொடுக்க மன்றாட்டுகள் கலந்த வாழ்த்துகளுடன்,

**அருட்பணி அமிர்த ஜெயசேகரம்**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 'கொவிட் 19'

## எனும் காலத்தின் அறிகுறி

**2019** ஆம் ஆண்டின் இறுதியில் சீனாவின் உஹான் மாநிலத்தில் தோன்றிய கொரோனா வைரஸ் என்கிற ஆட்கொல்லி வைரசானது, 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகத்தின் எல்லா இடங்களுக்கும் பரவத்தொடங்கி பெருந்தொற்றாக மாறியது. பெருந்தொற்றாக மாறிய இவ் வைரஸ் தாக்கத்திற்கு உலக சுகாதார ஸ்தாபனம் 'கொவிட் 19' என்கிற பெயரினையும் சூட்டியது. அன்று தொடங்கிய வைரசின் தாக்கமானது இன்று வரையிலும் பல திரிபடைந்த வைரஸ் மாறிகளாக மாறி (டெல்டா, ஒமிக்குரோன்) உலகெங்கும் நாளாந்தம் பல்லாயிரம் உயிர்களை பறித்த வண்ணமேயுள்ளது. இதுவரையில் உலகில் 370 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பெருந்தொற்றின் தாக்கத்திற்கு உள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

5.6 மில்லியன் வரையிலான மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளது. இது பாதிக்கப்பட்ட மக்கள் தொகையில் 1.6 சதவீதமாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாளாந்தம் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுகின்றதே தவிர குறைவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இது வரையில் காணப்படுவதாகத் தெரியவில்லை.

வைரசின் தாக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் உலக நாடுகள் எல்லாமே தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இதனை வெற்றி கொள்ளும் நோக்கில் உலகெங்கும் பல்வேறுபட்ட மருத்துவ ஆய்வுகளும், கலந்துரையாடல்களும், கலந்தாய்வுகளும் நடைபெற்ற வண்ணமேயுள்ளன. அதன் பயனாக பல்வேறுபட்ட தடுப்பூசிகளும் கண்டுபிடிக்கப்பட்டு அவை மக்களை நோய்த் தொற்றிலிருந்தும், உயிரிழப்புக்களிலிருந்தும் பாதுகாக்கும் வண்ணம் பாவிக்கப்பட்டு வருகின்றன. உலகின் பெரும்பாலான மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினாலும், மறுபக்கத்தில் அதனைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு காரணங்களால் ஆர்வமின்றி செயற்படுகின்ற ஒரு சமூகத்தினரையும் உலகமெங்கும் காண்பது ஆச்சரியத்தினையும், வியப்பினையும் தருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள அச்சமும், கேள்வியும் என்னவெனில் எப்போது இவ்வைரசின் தாக்கம் உலகிலிருந்து முற்றும் முழுவதுமாக அற்றுப்போகும்? எப்போது உலகமாந்தர் தங்களது வழமையான வாழ்க்கை முறைமைக்கு மீண்டும் திரும்ப முடியும்? எப்போது மருத்துவ உலகம் இதற்கு ஒரு முடிவினைக் கொண்டு வரும்? இத் தொடர் அச்சுறுத்தல் இன்னும் எவ்வளவு காலத்திற்கு தொடரப் போகின்றது? உண்மையாகவே இது இயற்கையாகவே தோற்றம் பெற்ற வைரஸ்தானா அல்லது ஆய்வுகூடங்களில் உருவாக்கப்பட்டு மக்கள் மத்தியில் ஏவிவிடப்பட்ட உயிரியல் ஆயுதமா? அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அதற்கான நோக்கமும், தேவையும் யாது? இப்படிப்பட்ட கேள்விகளால் முழு மானிடவர்க்கமே கலங்கிப் போயுள்ளமை அவதானிக்கத்தக்கது.

வைரசின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காக மருத்துவ ஆய்வுகளுக்கு அப்பால் பல்வேறுபட்ட முயற்சிகள் உலகமொங்கும் மக்களால் மேற்கொள்ளப்படுவதனை பல்வேறுபட்ட சமூக வலைத்தளங்களினூடாக அறியக்கூடியதாகவுள்ளது. வைரசின் தாக்கத்திலிருந்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள பல்வேறுபட்ட இயற்கை மூலிகை பாரம்பரிய வைத்தியமுறைகள் உலகெங்கும் மேற்கொள்ளப்படுவதையும், அவை பரவலாக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ளதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அதனைவிட பல்வேறுபட்ட சமய நம்பிக்கைகளால் ஆட்கொள்ளப்பட்ட மக்கள், வைரசின் கொடுக்கிலிருந்து விடுபடுவதற்காக பல வகையான வழிபாட்டு முயற்சிகள், இறை வேண்டல்கள், பிரார்த்தனைகள், பாரம்பரிய சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றிலும் ஈடுபடுவது நோக்கத்தக்கது.

மேற்சொல்லப்பட்ட செயற்பாடுகளின் மத்தியிலும், 'கொவிட் 19' இன் தாக்கமானது குறைந்தபாடில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும். கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக உலகம் அதனோடு இணைந்து பயணிக்கின்றது. இதற்கென ஒரு முழுமையான தீர்வு எட்டப்படாமை இருபத்தியொராம் நூற்றாண்டின் மருத்துவ விஞ்ஞான உலகிற்கு ஒரு சவால்தான். அத்தகைய பின்னணியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட 'கொவிட் 19' துடன் இணைந்த வாழ்வானது பல்வேறுபட்ட வாழ்க்கைப் படிப்பினைகளையும், பாடங்களையும் உலக மாந்தருக்கு கற்றுத் தந்துள்ளது என்றால் மிகையல்ல. அவை பல நேர்மறைத் தாக்கங்களையும், அதேவேளையில் பலதரப்பட்ட எதிர்மறைத் தாக்கங்களையும் ஏற்படுத்தித் தந்துள்ளமை நோக்கத்தக்கது. அவற்றுள் ஒரு சிலவற்றை நோக்கலாமென எண்ணுகிறேன்.

1. புதிய வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்ட நிலையொன்று உருவாகியுள்ளமை நோக்கத்தக்கது. வீட்டிற்குள்ளும், வெளியே செல்லும்போதும் முகக்கவசம் (mask) அணிகின்ற கலாசாரம், சமூக இடைவெளியினைப் பேணுவது, கைகளை நன்கு கழுவுவது அல்லது தொற்று நீக்கித் திரவம் (sanitizer) பாவிப்பது, இவை போன்ற இன்னும் பல செயற்பாடுகள் வாழ்வின் நாளாந்த அங்கமாகி விட்டன.

2. ஆரம்பத்தில் இழப்புக்களைக் கண்டு அச்சமும், பீதியும், கலக்கமுற்ற உலகானது இன்று அதனைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியினை பெற்றுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. அன்புக்குரியவர்கள் இறந்த போது அவர்களது உடலங்கள் அவர்களுக்கான இறுதி மரியாதை செலுத்துவதற்கு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படாமையினால் ஏற்படுகின்ற துயரத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கக் கூடிய வலிமையை உலகு பெற்றுள்ளமை அதிசயிக்க வைக்கிறது.

3. மக்களின் அன்றாட நகர்வுகள் (movements) தேவை நோக்கம் அடிப்படையில் சுருக்கப்பட்டுள்ளது. ஏனோதானோ என்கிற பயணங்கள் எல்லாம் அற்றுப்போய் தேவையின் அடிப்படையில் பயணங்கள் திட்டமிடப்படுவது வரவேற்கத்தக்கது.

4. மக்கள் மத்தியில் தேவையில் இருப்போரின் தேவைகளை பூர்த்திசெய்து கொடுப்பதற்கான மனப்பக்குவமும், தாராள உள்ளமும் பெருகியுள்ளமை நோக்கத்தக்கது. அயலிலும், சுற்றத்திலும் இருப்போரின் தேவைகளையறிந்து உதவி செய்கின்ற நல்உள்ளங்கள் இக் காலத்தில் பெருகியமை வரவேற்கத்தக்க விடயமாகும். அது மட்டுமல்லாது உலகளாவிய மானிடக் குடும்பமானது அடுத்தவர்களின் நலனில் அக்கறையுடன் செயற்படுகின்றமை மனதுக்கு ஆறுதலையும், மகிழ்வினையும் தருகிறது.

5. இறை நம்பிக்கையாளர்கள் மத்தியில் நம்பிக்கை அதிகரித்தமையும், இறைவேண்டலின் தேவையும், ஒருவர் மற்றொருவருக்காக மன்றாடுகின்ற மனிதநேயப் பண்புணர்வும் வெகுவாக அதிகரித்தமை நோக்கத்தக்கது. ஆலயங்கள், கோவில்கள், மசூதிகள், விகாரைகள், பல வழிபாட்டிடங்கள் மக்களின் நல்வாழ்விற்கான பிரார்த்தனைகளை சமய எல்லைகளைக் கடந்து மேற்கொள்கின்றமை சமயங்களின் நல்லிணக்க பண்பினை எடுத்தியம்பி நிற்கிறது.


6. உலகளாவிய ரீதியில் கற்றல் நடவடிக்கைகள் யாவும் தடைப்பட்ட சூழ்நிலையில், கல்வி முயற்சிகளை தடையின்றி மேற்கொள்ள மெய்நிகர் கற்றல் (online education) இணைய வழி கற்றல் முயற்சிகள் உலகமெங்கும் புதிதாக உருவெடுத்தன. இத்தகைய புதிய முயற்சியின் பயனாக, இதுவரையிலும் வகுப்பறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கல்வி முயற்சியானது உலகளாவியபாங்கினை கண்டுகொண்டமை வரவேற்கத்தக்கது. இதன் பயனாக உலகின் துறைசார் நிபுணர்களின் குரலுக்கு செவிமடுக்கவும், அறிவினை விருத்தி செய்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்களும் அதிகரித்தன.

7. கூடிய நேரம் வாழ்விடங்களில் செலவழிக்கப்பட்டமையால் கல்வியில் சுயதேடலுக்கும், சுயகற்றலுக்குமான வாய்ப்புக்கள் அதிகரித்தன. இதுவரையிலும் அடுத்தவரில் முழுமையாகத் தங்கியிருந்த கல்வி முறையானது மாணவர்களின், ஆய்வாளர்களின் சுயதேடல் வாய்ப்பினை அதிகரித்ததுடன், அவர்கள் அறிவு எல்லையினையும் கூட்டியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.



8. மக்கள் மத்தியில் வீண் ஆடம்பரங்களையும், செலவுகளையும் குறைத்துள்ளது. தேவைகளை தெளிவாகத் தெரிந்து கொள்ளவும், அவற்றினை செயற்படுத்துவதற்குமான வாய்ப்பினை அதிகரித்துள்ளமை சிறப்பாகும். இவை போன்ற, இங்கே குறிப்பிடாத இன்னும் பல நல்ல விடயங்கள் பெருந் தொற்று அவலத்தினால் ஏற்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

மறுபக்கத்தில், நன்மைகளை கொணர்வதிலும் பார்க்க பெருந்தொற்றானது பல்வேறுபட்ட சொல்லொண்ணா கண்ணீரையும், துன்பங்களையும், துயரங்களையும் மானிட வாழ்வில் கொணர்ந்துள்ளமை கண்கூடு. ஈடுசெய்ய முடியாத உயிர் இழப்புக்கள், மக்களின் வாழ்வாதார இழப்புக்கள், தொழில் இழப்புகள், நாடுகளின் பொருளாதார வீழ்ச்சிகள், மூன்றாம் உலகநாடுகளில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், விலைவாசி ஏற்றங்கள், மக்களின் சமூக ஊடாட்டங்கள் நீண்ட காலமாக அற்றுப்போயுள்ளமையினால் ஏற்படுகின்ற உளவியல் தாக்கங்கள் என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். அவையல்ல இங்கு நோக்கம், மாறாக 'கொவிட் 19' பெருந்தொற்று நிலையானது முழுமானிட சமூகத்தையே புதிய வாழ்க்கை முறைக்கு அழைத்துள்ளமை நோக்கத்தக்கதாகும். இவற்றிலிருந்து மானிட சமூகம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். சந்திக்கின்ற தீமையிலிருந்து விடுபட்டு நன்மைத்தனங்களை கற்றுக்கொள்ள மனித சமூகத்தால் முடியுமென்பதை வரலாற்றில் சந்தித்த பல்வேறுபட்ட அனர்த்தங்கள் கற்றுத்தந்துள்ளன என்பதை மனித சமுதாயம் மறந்துவிடக் கூடாது. இதற்கு சான்றுகளாக முன்னர் சந்தித்த யுத்தங்கள், இயற்கைப் பேரழிவுகள், பெருந்தொற்றுக்கள் ஆதாரமாயுள்ளன. சந்திக்கின்ற அனர்த்தங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளாத வரைக்கும் மானிட சமூகத்தின் வாழ்வில் மாற்றம் காண்பதென்பது கடினமானதே. எனவே இப்பேரழிவிலிருந்து உலகம் தன்னையே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் காலத்தின் அறகுறிகளை அறிந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அப்போதுதான் இக்கொடிய வைரசின் தாக்கத்திலிருந்து மானிட சமூகம் விடிவினைக் காண முடியும் ●

அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
முதுநிலை விரிவுரையாளர்,
கிறிஸ்தவக் கற்கைகள் நெறி,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைநதி கத்தோலிக்க ஊடக மைய இயக்குனர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபனுடன் ஒரு நேர்காணல்

கே: வணக்கம் அருட் தந்தை அவர்களே, யாழ். மறைஅலை தொலைக்காட்சியின் உருவாக்கங்களைப் பார்த்து பலனடைந்த எனக்கு இத்தொகுப்புக்கள் புலம்பெயர் வாழ் எம் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு மிகப்பயனுள்ளதாக இருக்குமென உங்களோடு தொடர்பு கொண்டு இப்பணிகள் பற்றி அறிய ஆவல் கொண்டேன். யாழ். மறைஅலை தொலைக்காட்சி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என அறியத் தருவீர்களா?

ப: யாழ். மறைஅலை தொலைக்காட்சி 2021 கார்த்திகை மாதம் யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக் குழுவால் ஆரம்பிக்கப்பட்டது.

கே: இந்த உருவாக்கம் உங்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் எவ்வாறு பயனளிக்கிறது?

ப: இலங்கையின் முதன் முதலாக திருப்பலியை நேரலை செய்தது யாழ். ஊடகத்துறையே ஆகும். அதுவும் கோவிட் 19 அனர்த்தத்தில் எல்லா செயற்பாடுகளும் முடங்கிப்போன கால கட்டத்தில் திருப்பலிக்கு ஆலயம் செல்ல முடியாத நிலை. இச்சூழலில் மக்களின் ஆன்மீகத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிமென்று யாழ். ஊடகத்துறை பல ஏற்பாடுகளை முன்னெடுத்தது. 1) ஞாயிறு திருப்பலி 2) நாளாந்த இறைவார்த்தை 3) குருக்களை சந்திக்க முடியாத நிலைமை, எனவே குருக்களின் ஞானொடுக்கத்தை ஞான உரைகளை எங்கள் ஆயர் குருமுதல்வரின் ஆலோசனையின் கீழ் சமூகவலைத்தள ஊடகங்களைப் பயன்படுத்தி இவைகளை நாம் நிறைவேற்றக் கூடியதாய் இருந்தது.

கே: இறைவனின் திட்டங்களோ அளப்பரியது. அந்த நெருக்கடியான காலகட்டத்தில் உங்கள் ஊடகம் மக்களுக்கு இவ்விதமான நன்மைகளை செய்ய வேண் டுமென இறைவன் முன் குறித்தே தெரிந்து வைத்திருக்கிறார் என்பது மிகத்துல்லியமாக விளங்குகிறது. உலகமே ஸ்தம்பித்துப்போன கோவிட் 19 காலத்தில் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையிலும் எங்கிருந்து உதவிபெற்று இந்நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தீர்கள்?

ப: உதவி என்று சொல்லப் போனால் இப்பணிக்கென பணியாளர்கள் தாமாகவே முன்வந்து எவ்வித ஊதியமும் இன்றி உதவிக்கரம் நீட்டினார்கள். எங்கள் கைவசம் இருந்த சிறிய கமராவும் ஒரு பழைய மடிக்கணணி தான் ஆரம்பத்தில் கைகொடுத்தது. அதன் பின்பு ஆயரின் உதவியோடு முக்கிய உபகரணங்கள் மற்றும் கணணி போன்றவற்றைப் பெற்றுக்கொண்டேன். இதன் பின்புதான் வாராந்தம் கத்தோலிக்க செய்திகளை ஒலிபரப்புச் செய்யக் கூடியாக இருந்தது.

கே: உலகிற்கெல்லாம் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்பது இறைவாக்கு. ஆனால், நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே சமூகவலைத் தளங்களை பயன்படுத்தி உலகு வாழ் மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து வருகிறீர்கள். தந்தை அவர்களே, இதனால் மக்கள் பலனடைந்துள்ளார்கள் என்பதை உங்களால் அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளதா?


ப: ஆமாம், பார்வையாளர்களின் தொலைபேசி அழைப்புகள், கருத்திடுகைகள் மற்றும் ஏனைய வீடியோ பார்வை வீதம் என்பவற்றின் வழியாக அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. காட்டாக, வாராந்தச் செய்திகள் சற்று தாமதமானால் தொலைபேசி மணிகள் ஒலிக்க ஆரம்பித்து விடும்.

கே: அருட் தந்தையே, பொதுமக்களாகிய எங்களிடம் இருந்து உங்களின் எதிர்பார்ப்பு என்ன?

ப: இவ்வூடகத்தை அதிகமானோர் பார்க்க மற்றையருக்கு அறிவிக்க பார்வையாளர்கள் (Viewers) சப்ஸ்கிரைப் (Subscribe) பண்ணுதல் மூலம் அதிக பலனை அடையலாம். அத்தோடு எம்மிடம் உள்ள குறைந்த வளங்களை நிவர்த்தி செய்ய உதவி புரியும் பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்க பணஉதவியும் தேவையாக உள்ளது. எம்மிடம் Catholic Media Jaffna diocese என்ற Facebook உண்டு.

யாழ். மறைஅலை தொலைக்காட்சியின் ஆக்கங்கள், பேட்டிகள், நேர்காணல்கள், வில்லுப் பாட்டுக்கள் முக்கியமாக எம் வருங்கால சமுதாயத்தை பாழடிக்கும் போதைவஸ்து விழிப்புணர்வு என அனைத்தையும் கேட்டும் பார்த்தும் பலனடைந்த நாம், புலம்பெயர் வாழ் மக்களிடையே இவ்வூடகத்தை அறிமுகம் செய்து, விழிப்புணர்வை ஏற்படுத்த எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். மேலும் மிகுந்த வேலைப்பழு மத்தியிலும் என்னுடைய கேள்விகளுக்கு பதிலளித்த உங்களுக்கு மனம் நிறைந்த நன்றிகள் அருட்தந்தையே, வணக்கம்.

நேர்காணல் செய்தவர்:
**திருமதி அற்புதம் சிவா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நாயகன் அருட்பணி தி.தேவராஜன் அடிகளார்

அருட்பணியாளன் தி. தேவராஜன் அடிகளார் குருத்துவ வாழ்வில் பொன் விழாக்காணும் இவ்வாண்டில் அவரது 50 ஆண்டுகள் அருட்பணி வாழ்வுப் பயணத்தில் எல்லாப் புகழும் இறைவனுக்கே என்ற மனமகிழ்வோடு நன்றி கூறும் பொன்விழா நாயகனை ஐக்கிய இராச்சிய பணித்தள இயக்குனர் அருட்பணி எல்மோ அருள்நேசன் அடிகள் மற்றும் அருட்பணி துஸ்யந்தன் அடிகள் ஆகியோருடன் இணைந்து வாழ்த்தி நிற்கின்றோம்.

அருட்தந்தை தேவராஜனுடன் பொன்விழா காணும் அருட்தந்தை எட்வின் அடிகளாரையும் வாழ்த்தி இறைவன் இவர்களது பணிவாழ்வை மென்மேலும் வளப்படுத்தி வழிநடத்த பணிவுடன் கரம்கூப்பி மன்றாடி நிற்கின்றோம்.

இளவாலைக் கிராமத்தில் புனித அன்னாள் ஆலயத்தில் 13ஆவது குருவாக 1972 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 19ம் நாள் திருநிலைப்படுத்தப்பட்டு இளம் குருவாகயாழ் மரியன்னை பேராலய உதவிக் குருவாக நியமிக்கப்பட்டார். இதனை தொடர்ந்து கரம்பன் புனித பேதுரு ஆலய உதவிப் பங்குத்தந்தையாக ஒன்றரை ஆண்டுகளும் புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபராகவும் விடுதிச்சாலைக் காப்பாளராகவும் நான்கு ஆண்டுகள் கடமையாற்றினார். தொடர்ந்து பேசாலை பங்கிலும் முருங்கன் பங்கிலும் நான்கு ஆண்டுகள் பங்குத் தந்தையாக பணியாற்றியுள்ளார். இவற்றை தொடர்ந்து மயிலிட்டி ஊறணி பலாலி பணித்தளங்களிலும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

**திருமதி கிறேஸ் ஆரோக்கியநாதன்**
கென்ரன் பணித்தளம்.

50 ஆண்டுகள் அருட்பணி வாழ்வில் பல்வேறு பணித்தளங்களில் ஆற்றப்பட்ட பணிகள் மகத்தானவை. அவை எல்லோராலும் பேசப்படுவது மட்டுமல்லாது புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபராக பணியாற்றியமை இன்றும் பலராலும் நினைவு கூரப்பட்டு நன்றியுணர்வோடு மீட்டுப் பார்க்கப்பட்டு புகழப்படுகின்றன. எவ்வளவோ சிரமங்கள் மத்தியிலும் சவால்களை ஏற்று ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியன.

குறிப்பாக விழாநாயகன் தன் கண் சுகவீனத்துடன் பணித்தளங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது மறைந்த ஆயர் அதிவணக்கத்துக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகை 1987ம் ஆண்டு கண் சிகிச்சைக்காக லண்டன் மாநகர் சென்று சிகிச்சைபெற அடிகளாரை அனுப்பியது ஒரு இறைதிட்டமே. இது ஐக்கிய இராச்சியத்தில் புலம்பெயர் இறை அடியார்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமே.



ஐக்கிய இராச்சிய ஆன்மீகப் பணியகத்தின் முதலாவது இயக்குனர் அருட்தந்தை தேவராஜன் அடிகளாராவார். இறைமக்களின் அடிப்படைத் தேவைகளான சொந்த மொழியில் (தமிழ் மொழியில்) திருப்பலி ஆராதனைகள் அருட்சாதனங்கள் என பல்வேறுபட்ட அன்றாட பிரச்சினைகள் என்று ஆன்மீக வாழ்வில் மக்கள் வளர, வழி நடத்தப்பட எமக்கென ஒரு குரு கிடைக்கப்பெற்றது ஒருபெரும் கொடையே. அந்நாட்களில் அடிகளார் எதிர்நோக்கிய சவால்களையும் வசதியின்மையையும் ஒரு பொருட்டாக் கிடாமல் இறைவழி நடத்தலுடன் பயணித்ததை நாம் மறப்பதாக இல்லை.

2004ம் ஆண்டு அடிகளாருடைய கண் சிகிச்சை வெற்றிகரமாகப் பூரணமடைந்ததால் பல்வேறு பணித்தளங்கள் உருவாக்கப்பட்டு பணிகள் விரிவடைந்தன. விசேடமாக வோல்சிங்கம் அன்னையின் யாத்திரிரைத் தலத்தில் நிரந்தரமாக தமிழ் வழிபாடுகள் ஸ்தாபிக்கப்பட்டு வழிமுறைப்படுத்தப்பட்டால் பல்லாயிரக்கணக்கானவர்கள் பயனடைந்தனர். இன்றும் பக்தர்கள் அன்னையின் அருள்பாலிப்பை அனுபவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பல சிரமங்களை சவாலாக்கி கடின பாதைகளை எதிர்கொண்டு இறைமக்களை இறையனுபவத்துக்குள் இட்டுச் சென்ற வழிநடத்துதல்களை நினைத்துப் பார்த்து இறைவனுக்கும் அடிகளாருக்கும் நன்றி கூறுகின்றோம். ஐக்கிய இராச்சிய ஆன்மீக பணித்தளம் இன்றும் சிறப்பாக வளர்கின்றது. ஆன்மீக வாழ்வில் தளராமல் உயிரோட்டமாக இருக்கின்றது என்றால் அருட்தந்தை ராஜன் இட்ட அடித்தளமே ஆகும்.


**திருப்பலி ஆராதனைகள் அருட்சாதனங்கள் என, பல்வேறுபட்ட அன்றாட பிரச்சினைகள் என்று ஆன்மீக வாழ்வில் மக்கள் வளர, வழி நடத்தப்பட எமக்கென ஒரு குரு கிடைக்கப் பெற்றது ஒரு பெரும் கொடையே!**

பொன்விழா நாயகனை நன்றியோடு நினைத்துப்பார்த்து இறையருள் வேண்டி அடிகளார் மென்மேலும் உடல் உள ஆன்மீக நலன்களில் வலுப்பெற்று பணிவாழ்வில் இறைமக்களை உருவாக்கிட அருள் வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம். அருட்பணியாளனே வாழ்க! வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகளும் வாழ்த்துக்களும்

என் இனிய நல்லுறவுகள் அனைவருக்கும் வேர்கள் சஞ்சிகை வாயிலாக கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்களையும் புத்தாண்டு ஆசிகளையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சிடைகின்றேன்.



2020-2021 காலப்பகுதியில் அருட்தந்தை எல்மோ அடிகளாரோடு இணைந்து, இலண்டன் தமிழ் கத்தோலிக்க மக்களாகிய உங்களோடு உறவாடவும் இறை பணியாற்றவும் எனக்குக் கிடைத்த வாய்ப்பை நான் பெரும்பேறாகக் கருதுகின்றேன். இறைமக்களின் விசுவாசமே ஒரு குருவானவரை தாங்கி நடத்து கின்றது. இதை நான் இங்கு பணியாற்றிய நாட்களிலே நன்றாய் உணர்ந்திருக்கின்றேன். குறிப்பாக கொவிட் தொற்று பயங்கரமாயிருந்த அந்நாட்களில், மரணங்கள் மலிந்து போயிருந்த வேளைகளில் எங்களை பலப்படுத்தி வாழ வைத்தது உங்களுடைய இறை நம்பிக்கை.

நான் எனது மேற்படிப்பை நல்ல முறையில் நிறைவு செய்யவும் எனது குருத்துவப் பணியை இங்கு ஆற்றவும் என்னை வழிநடத்தி தன் சிறகின் நிழலுக்குள்ளே என்னைப் பாதுகாத்த இறைவனுக்கு என் முதலும் முழுமையுமான நன்றிகள். இலண்டனில் நான் வாழ்ந்த காலத்தில் எனக்கு எல்லாமாகவிருந்து சகல வழிகளிலும் பக்க துணையாயிருந்து என்னை அன்போடும் மகிழ்ச்சியோடும் என்னை பராமரித்த ஆன்மீக இயக்குநர் அருட்பணி எல்மோ அடிகளாருக்கு என் உளம் நிறைந்த நன்றிகள். அனைத்து பணித்தளங்களிலுள்ள இறையுறவுகள் எல்லோருக்கும் என் சிறப்பான நன்றிகள். உங்களது தாராள உள்ளமும், நீங்கள் தந்த உற்சாகமும் உங்களின் ஆழமான செபங்களும்தான் கொரோணா காலத்திலும் நான் என் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யவும் இறைபணியாற்றவும் எனக்கு உறுதுணையாய் இருந்தன. அதே அன்பிலும் தோழமையிலும் நீங்கள் இன்றும் என்னோடு இணைந்திருப்பதையிட்டு நான் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன்.

கிறிஸ்துவின் பிறப்பு மண்ணுலகிற்கு விடியலைக் கொண்டு வந்தது. நாங்களும் கிறிஸ்துவைப் போல மனிதாபிமானத்தை மதிக்கின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க எங்களையும் அர்ப்பணித்துச் செயற் படுவோம். பாலகன் இயேசுவின் அன்பும் அமைதியும் உங்கள் குடும்பங்களில் தங்கவும், மலருகின்ற புத்தாண்டு மகிழ்வையும் வெற்றியையும் கொண்டுவருகின்ற வருடமாக அமையவும் அனைவருக்கும் இறையாசீர் வேண்டி அன்புடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

என்றும் அன்புடன்

அருட்பணி
பி. ஜோண் றெக்ஸன்

## செய்தித் துளிகள்

யாழ். மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப் பட்ட மறைமாவட்ட அன்பிய நாள் சிறப்பு நிகழ்வு மார்கழி 07ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடை பெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் சிறப்பு திருப் -பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து கலை நிகழ்வுகள் அங்கு இடம்பொற்றன.

இந்நிகழ்வில் கடந்த காலங்களில் யாழ். மறைமாவட்ட அன்பிய இயக்குனராக பணியாற்றிய கிளரீசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மில்பர்வாஸ் அவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வும் இடம் பெற்றது.

---

யாழ். மறைமாவட்ட மரியாயின் சேனையினரால் முன்னெடுக்கப்பட்ட ஆண்டு விழா மார்கழி 04ஆம் திகதி நடை பெற்றது. யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் பாசையூர் பங்குத்தந்தை அருட் தந்தை ஜெறோம் செல்வநாயகம் அவர்களின் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து பாது -காவலன் மண்டபத்தில் ஒன்றுகூடல் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் யாழ் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலிருந்தும் மரியாயின் சேனை அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

---

யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியினரால் முன் னெடுக்கப்பட்ட புனித பிரான்சிஸ்கு சவேரி -யார் திருவிழா மார்கழி 03ஆம் திகதி சனிக்கிழமை இன்று நடைபெற்றது.

குருமட அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடை பெற்ற இவ்விழாவில் திருநாள் திருப்-பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தார். தொடர்ந்து மாலை நிகழ் வாக விளையாட்டு நிகழ்வுகள் குருத்து வக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற துடன் இந் நிகழ்வுகளில் குருக்கள் அருட் சகோதரர்கள் இணைந்து பங்குபற்றி னார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் உள்ளார்ந்த இயல்பு அன்பு என்றுரைத்த...

ஆண்டவரே நான் உம்மை அன்பு கூர்கின்றேன் என இறப்பதற்கு சில மணி நேரங்களிற்கு முன்னர் இறுதி வார்த்தையை திருவாய் மலர்ந்த திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி இறைவனின் பாதம் சேர்ந்தார்.

கத்தோலிக்க திருச்சபையின் 265 ஆவது திருத்தந்தையாக தலைமையேற்று தனது முதல் சுற்றுமடலான அதாவது 2005 டிசம்பர் 25 கிறிஸ்து பிறப்பு விழாவில் கையொப்பமிட்ட கடவுள் அன்பாய் இருக்கிறார் சுற்று மடலில் கடவுளுக்கும் மனிதனுக்கும் அன்புக்கும் இடையே உள்ள நெருங்கிய பிணைப்பை எவ்வாறு வெளிப்படுத்தினாரோ அதனையே 95ஆவது வயதில் தனது இறுதி வார்த்தையாகவும் கூறிச் சென்றுள்ளார்.


2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தையாக பணியாற்றிய திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் 1927 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி யோசப் அலோயி சுராட் ஸிங்கர் எனும் இயற்பெயருடன் ஜேர்மனியில் பிறந்தார். கடவுளின் அழைப்பை ஏற்று 1951 ஆண்டு குருத்துவப் பயணத்தைத் தேர்ந்து கொண்ட இவர் பின்னர் 2005 ஆம் ஆண்டு தனது 75 ஆவது அகவையில் திருத்தந்தையாகப் பொறுப்பெற்றார்.

இன்றைய உலகில் மக்களின் முழு வளர்ச்சிக்குக் கிறிஸ்தவ சமயம் துணையாக உள்ளது என்னும் கருத்தை வலியுறுத்திய திருத்தந்தை உலகமயமாக்கும் போக்கு கடவுள் நம்பிக்கையிலிருந்து மக்களைத் திசைதிருப்பி விடும் ஆபத்தை கொண்டுள்ளது என்றும் உண்மையான மதிப்பீடுகளை வாழ்வில் கடைப்பிடிக்கும் போதுதான் மனித வாழக்கை வளம்பெறும் என்றும் அவர் தனது போதனையில் பிரதானமாக எடுத்துரைத்தார்.

அதேவேளை கடவுளால் படைக்கப்பட்டுள்ள உலகத்தை மனிதர்தம் பகுத்தறிவின் துணை கொண்டு ஆயந்து அறிந்து சீரமைக்கும் பொறுப்பு கொண்டுள்ளார்கள். எனவே கடவுள் நம்பிக்கை என்பது மூடநம்பிக்கை அல்ல. மாறாக மனித பகுத்தறிவுக்கு உகந்ததே கடவுள் நம்பிக்கை. ஆனால் மாறாகப் பகுத்தறிவு தன்னால் எல்லாம் கூடும் என்றும் மமதை கொண்டு கடவுள் துணை வேண்டாம் எனும் போக்கில் போவது தவறு என்று சுட்டிக் காட்டினார். தனது 7 ஆண்டு கால பதவிக் காலத்தில் கடவுள் அன்பாய் இருக்கிறார் (God is Love). எதிர்நோக்கால் மீட்படைகிறோம் (Saved by Hope), உண்மையில் தோய்ந்த அன்பு (Love in Truth) ஆகிய மூன்று சுற்று மடல்களை வெளியிட்ட திருத்தந்தை அவற்றில் கடவுள் அன்பு பிறரோடு பகிர்தல், நம்பிக்கை, ஏழை நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையே அதிகரிக்கும் இடைவெளி போன்ற பலதரப்பட்ட விடயங்களை அவர் பகிர்ந்து விளிப்படைய வைத்துள்ளார்.


உலக மக்களால் நேசிக்கப்பட்ட இறைவனின் தூதுவனாகப் பார்க்கப்பட்ட திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் திருத்தந்தை பதவியிருந்து ஓய்வு பெறுவதாகத் தனது விருப்பத்தை தெரிவித்து பதவியை இராஜினாமா செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். 600 ஆண்டுகளுக்கு பின்னர் திருத்தந்தை ஒருவர் இராஜினாமா செய்த நிகழ்வு இது என்றும் மிகவும் அரிது என்று அந்நேரத் தில் பிரபலமான பல ஊடகங்களில் உரையாடப்பட்டமை இங்கு முக்கியமாக நோக்கத்தக்கது.

பணித்துறப்பின் பின்னர் வத்திக்கான் நகரின் தோட்டத்தில் உள்ள மாத்தர் எக்லேசியா என்னும் துறவு இல்லத்தில் தங்கி இறை வேண்டலில் ஈடுபட்டு வந்த முன்னாள் திருத்தந்தை பெனடிக்ட் தனது 95 ஆவது வயதில் காலமானார் ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கான்ஸ்ஹில் பணித்தளத்தின் ஒரு தசாப்த பயணம்



கான்ஸ்ஹில் பணித்தளத்தில் தமிழ்த் திருப் பலிகள் மற்றும் வழிபாடுகள் ஆரம்பிக்கப் பட்டதன் 10வது வருட நிறைவு தினமானது இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 21ம் நாள் புனித அகுஸ்தின் தேவாலயத்தில் நினைவு கூர்ந்து கொண்டாடப்பட்டது.



அன்றைய நாள் மாலை 7.30 மணிக்கு நற் கருணை வழிபாட்டுடன் நன்றித் திருப்பலி யும் ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆன்மீக வாழ்வில் வளர வழிகளமைத்துத் தந்த இறைவனுக்கு ஆராதனையும் நன்றியும் செலுத்தப்பட்டது. எமது ஆன்மீக இயக்குநர் அருட்பணி எல்மோ அடிகளார் இத்திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றினார். இவருடன் உதவி பணி யாளராக செயற்படுகின்ற அருட்பணி துஸ்-யந்தன் அடிகளாரும் கான்ஸ்ஹில் பங்குத் தந்தை அருட்பணி கனன் போல் அவர்களும் திருப்பலியில் இணைந்து கொண்டார்கள்.

இலண்டன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் கள், ஏனைய பணித்தள இணைப்பாளர்கள், இப்பணித்தளத்தில் தமிழ்த் திருப்பலியை ஆரம்பிக்க முன்னின்று முயற்சிகளை மேற் கொண்டவர்கள் மற்றும் பணித்தளத்தின் இறைமக்களுமாக பலர் இந்நாளிலே எம் மோடு கலந்து சிறப்பித்தமை எமக்கு இரட்டிப் பான மகிழ்ச்சியை அளித்தது.

திருப்பலியைத் தொடர்ந்து பத்தாண்டு பய ணத்தின் நினைவுகள் மீட்டிப் பார்க்கப்பட் டன. எமது பணித்தள இணைப்பாளர் திரு சேவியர் லூக் புனிதராஜ் தலைமை உரை யாற்றினார். கடந்த காலங்களில் இப்பணித் தளத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றிய அனைவ ருக்கும் இந்நினைவு நாளை சிறப்பிக்க ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாக உறுப்பினர் கள் மற்றும் இறைமக்களுக்கு நன்றி சொன் னார். தொடர்ந்து உரை வழங்கிய ஆன்மீக இயக்குநர் அருட்பணி எல்மோ, இப்பணித்தள மக்களின் நம்பிக்கையையும் குறிப்பாக அவர் கள் நான்காண்டு காலமாய் தொடர்ச்சியாக தினமும் முன்னெடுத்து வருகின்ற வைபர் மூலமான விவிலியப் பகிர்வு செபக்குழுவின் ஆர்வத்தையும் பாராட்டியதோடு, நாம் இன் னும் அதிகமான மக்களை ஆன்மீகப் பாதை யில் வழி நடத்த அவர்களை ஆலயத்திற்கு கொண்டுவந்து சேர்க்கும் பணியில் முனைப் புடன் செயற்பட வேண்டுமென்றும் அழைப்பு விடுத்தார். எமது ஆன்மீகச் செயற்பாடுகள் மற்றும் வழிபாடுகளுக்கு ஆலயத்தை தந்துதவு கின்ற பங்குத்தந்தைக் கும் சிறப்பான நன்றி களைப் பகிர்ந்து நின் றார்.

பங்குத் தந்தையாகிய கனன் போல் அவர்கள் உரையாற்றுகையில் தமிழ் மக்களின் ஆன் மதாகமும் தேடலும் தன்னைக் மிகக்கவர்ந் துள்ளதாகவும், தாம் இம் மக்களுக்கு உதவி செய்ய எப்போதும் மகிழ்ச்சியோடு ஆயத்தமாய் இருப்பதாகவும் தெரி வித்தார். உதவி அருட்பணியாளர் துஸ்யந்தன் அடிகளார் 'ஒரு தசாப்தத்தின் பயணம்' என்கின்ற நினைவு மலரை வெளியிட்டு உரையாற்றுகையில், எம் மக்க ளின் குருக்கள் மீதான அன்பையும் அக்கறை யையும் பாராட்டியதோடு, ஆன்மீகப் பயணத் தில் ஆண்டவருக்குள் இன்னும் ஆழமாகி அவரை அனுபவிப்பதோடு மனிதர்களைப் பிடிக்கின்றவர்களாக மாற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து நிர்வாக உறுப்பினர்களது உரை களையும் நன்றியுரையையும் தொடர்ந்து இரவு விருந்துபசாரத்துடன் அந்நினைவுநாள் நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன ●

திருமதி சுலேக்கா டன்ஸ்ரன்
கான்ஸ்ஹில் பணித்தளம்



## செய்தித் துளிகள்

● மன்னார் மறைமாவட்ட சமூக தொடர்பு அருட்பணி மையம் மற் றும் கலையருவியினால் கலை யருவியின் உள்ளக வீதி திறப்பு விழாவும், கரோல் போட்டியின் விருதுவிழா நிகழ்வும் 01 செப் டெம்பர் 2022 அன்று நடை பெற்றது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்ட இவ் விழாவில் மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அருட் பணி கிறிஸ்துநாயகம், ஆயரின் பதில் குரு அருட்பணி S. எமிலியா -னுஸ்பிள்ளை, பள்ளிமுனை பங்குதந்தை அருட்பணி மரிய தாசன் சீமான், யோசவ்வாஸ் நகர் பங்குதந்தை அருட்பணி ராச நாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினரர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தனர்.

● மன்னார் மறைமாவட்ட புனித யோசவ்வாஸ் இறையியல் கல் லூரியின் புதிய கல்வி ஆண்டு கடந்த ஜனவரி மாதம் (2022) ஆரம்பிக்கப் பட்டது.

மன்னார் மறைக்கோட்ட முதல் வர் அருட்பணி அகஸ்ரீன் புஸ்ப-ராஜ் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆரம்பிக் கப்பட்ட இப்புதிய கல்வி ஆண்டு நிகழ்வில் அருட்பணி கிறிஸ்து ரூபன் பெர்ணாண்டோ, அருட் பணி அருள்ராஜ் குரூஸ், அருட் பணி கிருசாந், பள்ளிமுனை பங்குத்தந்தை அருட்பணி மரிய -தாசன் சீமான் மற்றும் இறை யியல் கல்லூரியின் கடந்த ஆண்டு மாணவர்கள் புதிய நுழைவு மாணவர்கள் அருட்சகோதரர்கள் அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்து கொண்டமையும் புனித யோசவ்வாஸ் இறையியல் கல் லூரி தொடர்ந்து சிறப்பான முறை யில் செயல்பட்டு வருவதும் குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன யுத்தம்



**தா**ய் மண்ணில் பிறந்தோம் - எம் தமிழ் மண்ணில்
கவலையின்றி இளமையில் குறைவின்றி வாழ்ந்தோம்
எம் தாயகத்தே போர் மேகம் இருட்டிடவே ஊர் விட்டு,
உறவு விட்டு உள்ளத்து நினைவுகளை இறக்கி
விட்டு கால் பாதி வயதினிலே கனத்த மனதுடனே
ஆங்கில மண் வந்தோம். எத்திசையில் திரும்பிய
போதும் அங்கே தமிழ் மணம் வீசக்கண்டேன் விசா
எடுத்து, வேலை தேடி, கல்வி தேடி, வீடு தேடி,
வாழ்வு தொடங்கி - இங்கே உள் நாட்டு யுத்தம்
இல்லை, சுனாமி அழிவு இல்லை, பாதுகாப்பு, நிம்மதி,
சுதந்திரம் உண்டு, என நினைத்து மீதி வயதினிலே,
வாழ்ந்து வர கும்பிட்ட தெய்வத்திற்கு குறைவிட்டோமா?


பாஸ்கா காலமதில், ஆண்டு 2020 தனில் உலகில் முதல்,
வெடி மருந்து ஆக்கியோன், ஆக்கினான் ரகசிய சாலையில்
விஷ மருந்து ஒன்று வூகானில் இருந்து வெளியே வந்தது,
தவறு என, ஆனால் தவறு அல்ல காற்றிலே, மெய் உடன்,
பொய் உடன், எல்லாம் வேகமாய் பரவி, பறந்து
பயண சீட்டு இன்றி பல விமானம் ஏறி
உலகை வலம் வந்த தொற்று நோய் - மனித குலத்தை
மௌனிக்க வைத்து விட்டது. கண்களால் காண கிட்டவில்லை,
உணர்வினால் உணர முடியவில்லை. மகள் தாயிடம்
"என்னை தொடாதே" என்று கூற இறைவன், ஆலயங்கள்,
பாடசாலைகள், வேலை இடங்கள், உடன் வீட்டுக் கதவுகளும்
மூடப்பட்டன. வைத்தியசாலைகள் மட்டும் படுக்கை இன்றி
நிரம்பியது. தேசிய சுகாதார சேவையினர் விண்வெளி வீர
உடையுடன் மானிட உயிர் காக்க போராடினர்.
உலகமே பக்கம் மாறி சுழலுவது போன்ற பிரமை.

போட்டி போட்டு அணு ஆயுதங்கள் பெருக்கும் வல்லரசு நாடுகள்
மேற்கத்திய நாடுகள், ஆசியா, ஐரோப்பாவின் பொருளாதாரம்
நிலை குலைந்து செல்வம் இழக்க, அரச தலைவர்கள் கை கட்டி,
செயல் இழக்க, "கத்தி இன்றி, யுக்தி இன்றி யுத்தம் இன்றி,
சத்தம் இன்றி" உன்னை விட நான் பலம் மிக்கவன் என
சவால் விட்ட காற்றினிலே கலந்து வந்த கோவிட்19 வைரஸ்,
மனித குலத்தின் சுதந்திரத்தை பேச்சை, மூச்சை, திரைபோட்டு
மறைத்துவிட்டு பல கோடி மக்கள் மூச்சுவிட போராடி, தோற்றுவிட,
மனித குலத்தை, மௌனத்தில், தனிமையில் மரணிக்க வைத்த
செயல் - இது இறைவனின் விதியா? இல்லை.

விஞ்ஞான உலகினிலே, விண்ணிலே கால் வைத்த
மனிதன் இழைத்த சதியா? இது? கேள்வியின் பதிலே இங்கே
கேள்விக் குறி இந்த மௌன யுத்தம் இன்னும் தொடர்கிறது எம்
வாழ்வில் இது புதிய அனுபவம் மனுக்குலத்தை மீட்க வரும்
இறைவனில் நம்பிக்கை வைத்து எங்கள் மீதி வாழ்வு தொடர்கிறது

**- ஜெயமதி அமுது**

# வாழ்த்துகின்றோம்




இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநராகப் பணியாற்றி வருகின்ற எம் அன்புக்கும் மதிப்புக்கு முரிய அருட்தந்தை எல்மோ ஜெயராசா அவர்களும் முன்னாள் உதவி பணியாளராகப் பணியாற்றிய அருட்பணி றெக்சன் பிலிப்புராசா அவர்களும் கடந்த பங்குனி மாதம் 26ஆம் திகதி இலண்டன் தூய மரியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகலைமானிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இவர்கள் இருவரும் கத்தோலிக்க கல்விசார் தலைமைத்துவத்தில் தமது கற்கை நெறியை மேற்கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அருட்பணி றெக்சன் அடிகளார் யாழ் ஆயரின் செயலராக பணியாற்றி வருகின்றார். இவர்கள் இருவரையும் 'வேர்கள்' சஞ்சிகை ஊடாக இலண்டன் தமிழ் கத்தோலிக்க இறைமக்கள் பாராட்டி நிற்பதோடு, இவர்களின் பணி சிறக்க வாழ்த்தி நிற்கின்றோம்.



எமது 'வேர்கள்' இதழை வடிவமைப்பு செய்வதற்கும் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியத்தின் பல்வேறு வகையான அச்சுப் பதிப்பு மற்றும் வடிவமைப்புகள் செய்வதற்கும் நீண்ட காலமாக உதவி வருகின்ற திருவாளர் அல்பேட் பெஸ்ரியன் அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் பண்பாட்டு கற்கையைப் பூர்த்தி செய்து, முதுகலைமானிப் பட்டத்தை 2021 மாசி மாதம் 25 அன்று பெற்றுக் கொண்டார். அவரை 'வேர்கள்' இதழூடாக வாழ்த்துவதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அவருடைய சேவையும் எதிர்காலமும் சிறக்க வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

## இயேசுவே நீர் எனக்கு யார்?



உன் வார்த்தை என் காதில்
அமிர்தமாய் அன்றாடம்
ஒலித்து நிற்க
அதுவே என் வழியின்
விழியாய் வெளிச்சம் தந்து
பாதைக்கு விளக்காய்
ஒளிகொடுக்கும் அழியா ஒப்பற்ற
ஒளிமுதல் நீரெனக்கு

அடுக்கடுக்காய் துயரங்கள்
துரத்தினாலும் துவளவிடாது
தடுத்தெனைக் காத்து உயர்த்தி
உலகிற்கே ஒளியாக்கினாயே
மிடுக்காய் நடக்க வைத்து
தொலைந்த ஆடாய் என்னை
கண்டுபிடித்துக் கட்டியணைத்து
உம் பிள்ளையாய் உதரத்தில் தாங்கிய
உத்தம தந்தையப்பா நீர்

என் பாடுகளில் பங்காளியில்லை
என்றால் மாட்சியிலும் ஆட்சியிலும்
பங்கில்லையெனப் பங்கிட்டுக்
கொண்டாயோ

வாட்டும் கவலைகளுக்குள்
தோய்த்தெனை மீட்டெடுத்துப்
பொன்னைப் புடமிடுவதுபோல
புடமிட்டு புதிய புத்திரியாய்த்
பத்திரமாய் பவுத்திரமாய்க் காத்த
பரிசுத்தரையா நீ

ஆண்டவருக்கு அஞ்சுவோர்
அவரது சொற்படி நடப்பார்
அவரது வழியை பின்பற்றுவோர்
அவருக்கு கீழ்ப்படிவோரென
அன்றாடம் அகத்தில் உரைத்து
அஞ்ச வைத்து அஞ்சாதே
இனி நான் உனக்குத் தலைவனில்லை
நண்பனென நவின்ற இயேசுவே
நீர் என் நண்பன்

ஆண்டவனே நீர் கொடுத்த
அளப்பரிய ஆற்றல்களையும்
அதிகாரத்தையுங் கொண்டு
ஆயிரமாயிரம் மக்களின்
அன்றாடத் தேவைகளை
ஆற்ற முடியாவிட்டாலும்
அற்பமாயாவது அனுதினம்
அடுத்தவருக்கு பயன்படப்
பயன்படுத்தும் பக்குவமான
உன் கையின் களிமண் நான் ராஜா
உன்னையென் உள்ளங்கைகளில்
வரைந்திருக்கின்றேனென
உரைத்த உன் வார்த்தை
உயிருள்ளதென உள்ளத்திலும்
உடலிலும் உணர்வுகளிலும்
பதித்த வைத்துப் பாதுகாக்கும்
பாசமுள்ளதாய் நீ

உனைப் புசிக்கிறேன்
உயிருள்ள அழியா உணவாயும்
தாகந்தீராப் பானமுமாய்
உன்னுடலாலும் இரத்தத்தாலும்
உன்னோடிணைந்த என் உயிராய்
உன்னையுண்டு உன்னில்
ஒன்றாகினேனே உன்னுள்
உறைந்து நானும் நீயாய்

**திருமதி திரேஸ் மரியதாஸ்**
இலண்டன், சட்டன்

## மகிமையின் தேவபாலன் இயேசு



தூயஆவி கரிசனையோடு ஆசிநல்க
மரியாளும் தாழ்பணிந்து
இறை சித்தத்தை ஏற்று
மாசுமறுவற்ற மகிமையின் தேவன்
பாலன் இயேசுவை கருவினில்
சுமந்து பயணித்தாள் அன்று

தவப்பூமி பெத்தலகேமில்
கொட்டும் பனியில் கடும் குளிரில்
மாட்டுத் தொழுவமதில்
மரியின் மடியில் அவதாரம்
ஆனார் பாலன் இயேசு

இடையர்கள் புடைசூழ
வானவர் கீதம் பாட கொஞ்சும்
மொழியில் பிஞ்சுவதனம் சிரிக்க
மரியாளும் சூசையப்பரும்
தமைமறந்து இன்பம் கொள்ள
மனுவுருவானார் இயேசுபாலன்

பாவிகளைத்தேடி மீட்கவந்த பரமன்
துயரங்களை போக்கவந்த தூயவன்
இன்னல்களை நீக்க வந்த இனியவன்
அன்பென்னும் பண்புகளை
ஆணித்தரமாய்ச் சொல்லிவிட
ஆயுளையே கொடுத்த அன்புமகன்
மனிதனானார் இன்று மரியின் மடியில்

பகைமைதனை மறந்துநல்
பண்பினை வளர்த்து
ஓர் குலமாய் இணைந்து
மாந்தர்கள் நாம் இன்று கொண்டாடுவோம்
மாசுமறுவற்ற மகிமையின் தேவன்
பாலன் இயேசுவின் பிறப்பை..

**செல்வி றெபேக்காவீனஸ் பிரபாகரன்**
ஏல்ஸ்பீல்ட் பணித்தளம்.

## விசுவாசத்தில் நிலைத்தோம்

ஐயம் எம்மை ஆட்கொண்டது
அதுவே நம்மை புதுப்பித்தது
நித்தம் இறைவனை நாம் நினைத்தது
நிர்க்கதியின்றி நாம் நிலைத்தது

மரண பயம் நாம் கொண்டது
சிலுவையின் பாடுகளாய் நாம்
சுமந்தது கதவினை மூடி
காத்திருந்தோம் விடியலை
தேடி விழித்திருந்தோம்

என்றும் எதிலும் அகம் நிறைந்தது
செபமே வாழ்வாய் நாம் ஜெயித்தது
துன்ப துயர வேளையிலும்
விசுவாசத்தில் நாம் நிலைத்தோம்


மூதூர் **இ. எ. விஜயநாதன்**
Chessington - UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர்களும் விருட்சங்களும்

பூக்களின் வாசம் ஊரறியும், வேர்களின் வியர்வை யாரறிவார்?



இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் சஞ்சிகையாகிய 'வேர்கள்' சில வருடங்களின் பின்னர் மீண்டும் வெளிவருகின்ற வேளையில் அதற்கு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகைக்கு வேர்கள் என மிகவும் பொருத்தமாக பெயரிடப்பட்டுள்ளது. அதாவது, விருட்சங்களுக்கு அத்திவாரம் வேர்கள். மரங்கள் எவ்வளவு வளர்ந்து கிளை பரப்பினாலும், கனிகளை மலர்களைத் தந்தாலும் அவற்றின் வேர்கள் இல்லாமல் எதுவும் சாத்தியமில்லை. ஒரு மரத்தின் உறுதிக்குக் காரணமாய் இருப்பது அதனுடைய வேர்களாகும். அதேபோல் கண்டங்கள் கடந்து புலம்பெயர்ந்து அந்நிய தேசத்தில் பல்வேறு வகையான கலாசாரங்கள், முற்போக்கான சிந்தனைகள் உலகின் மத்தியில் வாழ்ந்தாலும் வளர்ந்தாலும் எம் வேர்கள் எம் தாய்நாட்டில்தான் இருக்கின்றன. இலண்டன் மாநகரிலோ வேறு எந்த புலம்பெயர் தேசத்திலோ நாம் எல்லாவற்றையும் இழந்து வந்தாலும் எமது கிறிஸ்தவ வாழ்வு அசையாது நிலைத்து நிற்பதற்கு காரணம் எமது வாழ்வின் அடிப்படையான ஆன்மீக விசுவாசம் என்னும் வேர்களாகும்.

மேலும் எம் தாய் நாட்டிலுள்ள எம் உறவுகளின் பொருளாதார வாழ்வாகட்டும் அவர்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளாகட்டும் எல்லாமே பெரும்பாலும் புலம்பெயர் உறவுகளின் தாராள நன்கொடைகளிலே தங்கியிருப்பதை எவரும் மறுக்க முடியாது. அம்மக்களின் வசதியான செழிப்பான வாழ்வுக்கு காரணமானவர்கள் புலம் பெயர் உறவுகள் (வேர்கள்) என்பது கண்கூடு.

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் யாழ் மறைமாவட்டத்தில் கல்விப்பணியாற்றும் குருக்களின் உயர்கல்விக்கு நீண்ட காலமாக பங்காற்றி வருகின்றது. அந்த வரிசையில் நானும் 7வது குருவாக எனது முதுகலைமானிப் பட்டத்தை கத்தோலிக்க கல்லூரித் தலைமைத்துவத்தில் நிறைவுசெய்துள்ளேன். இவ்வாறு நாங்கள் மாணவர்களை உருவாக்கும் பணியில் எங்களை வளர்த்துக் கொள்ள உதவி புரிந்தது இலண்டன் தமிழ்க் கத்தோலிக்க மக்களின் வியர்வை என்பதை மறுக்க முடியாது. எனவே, ஆன்மீகப் பணியக இயக்குநர் அருட்தந்தை எல்மோ அடிகளாருக்கும் வேர்களாய் எமைத் தாங்கும் இறை மக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்து அனைவரையும் வாழ்த்தி இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

கடந்த ஒரு வருட காலமாக அருட்பணி எல்மோ அடிகளாருடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்கள் என் குருத்துவ வாழ்வில் மறக்க முடியாதவை. நீண்ட தூரங்கள் சென்று பல சிரமங்கள் மத்தியில் பதினைந்து பணித்தளங்களிலுள்ள இறை மக்களை ஒன்று கூட்டி திருப்பலிகள், வழிபாடுகள், அருட்சாதனங்களை நிறைவேற்றி மக்களின் ஆன்மீக தேவைகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்ற அவரது பணிகள் பாராட்டுதலுக்குரியபைவ. அருட்தந்தையின் சேவைகள் இன்னும் சிறக்க வாழத்தி நிற்கின்றேன். இவ்விடத்தில் ஒவ்வொரு பணித்தளத்திலுள்ள இறைமக்கள் அனைவருக்கும் எனது சிறப்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவரது அன்பான வார்த்தைகளும், தட்டிக்கொடுப்புக்களும், வழிகாட்டுதல்களும் செபங்களும் என்னை வலுப்படுத்தி வளப்படுத்தியுள்ளன. அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.

வேர்கள் (சஞ்சிகை) இன்னும் ஆழமாகி விருட்சங்களைத் (ஆன்மீகத்தை) தாங்கிட என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அனைவருக்கும் என் இனிய நத்தார் புதுவருட நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருட்பணி அ. அன்ரன் துஷ்யந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுதுகளுக்கு வேர்களின் அஞ்சலி

**எமது தாயக தமிழ் மறைமாவட்டங்களான யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு திரு அவை என்கின்ற விருட்சங்களைத் விழுதுகளாய்த் தாங்கி இன்று இறையோடு சங்கமமாகி விட்ட அனைத்து அருட்பணியாளர்கள் மற்றும் துறவிகளுக்கு 'வேர்கள்' தனது இதய அஞ்சலியை தெரிவித்து நிற்கின்றது.**

01. போர்டோவின் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி அக்னஸ் மாரி பீரிஸ் அவர்கள் 24.12.2022 அன்று யாழ்ப்பாணத்தில் இறையடி சேர்ந்தார்.

02. போர்டோவின் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி றுபினா சாமிநாதர் அவர்கள் 13.11.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் 62 வருடங்கள் அர்ப்பண வாழ்வில் நிலைத்திருந்து யாழ். மன்னார் மறைமாவட்டங்களில் ஏராளமான பணியாற்றியுள்ளார்.

03. யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை நீக்கிலஸ் அவர்களின் அன்புச் சகோதரனும் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்தவருமான அருட்தந்தை திருச்செல்வம் அவர்கள் 06.11.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் கடினமான பல பங்குகளில் பணியாற்றயதோடு இந்தியாவிலும் சில ஆண்டுகள் மறைபணியாற்றியுள்ளார். மலையகத்தில் தனது பணிகளை விரிவுபடுத்தியதுடன் குருமட மாணவர்களை உருவாக்கும் பணியில் பல ஆண்டுகள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

04. அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை பிரட்றிக் தேவராஜா அவர்கள் 05.11.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். சேட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள இலுப்பைக்குளம் பங்கில் பங்குத்தந்தையாக பணியாற்றிக் கொண்டிருந்தார். கடந்த காலங்களில் டென்மார்க் நாட்டில் ஆன்மீகக் குருவாகவும் கிளிநொச்சி ஒப்ரெக் நிறுவனத்தின் இயக்குனராகவும் வவுனியாவில் அமைந்துள்ள மறையுரைஞர் குழுமத்திலும் பணியாற்றியவர்.

05. போர்டோவின் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி அல்போன்ஸ் மேரி குரூஸ் அவர்கள் 29.10.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

06. மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு இராயப்பு அவர்கள் 24.09.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். கண்டி அம்பிட்டிய தேசிய குருமட மெய்யியல் துறையின் ஆன்மீகக் குருவாகவும் விரிவுரையாளராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தவர். இவர் மன்னார் மறைமாவட்டத்தில் பல பங்குகளில் பணியாற்றியதுடன் கல்விப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபராகவும், சேவியர் ஆண்கள் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார்.



07. திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி எலிசபேத் பஸ்ரியாம்பிள்ளை 04.08.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

08. யாழ் மறைமாவட்டக் குருவும் தற்போது அமெரிக்காவில் பணியாற்றி வந்தவருமான அருட்திரு மைக்கல் பற்றிக் அவர்கள் 04.08.2022 அன்று இறையடி சேர்ந்தார்.

09. போர்டோவின் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி அமலி தெபேறிரா 27.07.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

## செய்தித் துளிகள்

● யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக மாதந்த கூட்டம் 03 ஆம் திகதி யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நடு நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்.மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குனர் அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 2023ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் பொதுநிலையினர் கழக உறுப்பினர்களுக்கான கிறிஸ்மஸ் நிகழ்வும் நடைபெற்றது.

● யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத் திருவிழா கார்த்திகை 13ஆம் திகதி நடைபெற்றது. குரு-மட அதிபர் அருட்தந்தை ஜெய-றஞ்சன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இவ்விழாவில் திருநாள் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தார். காலைத் திருப்பலியை தொடர்ந்து மதியம் நற்கருணை ஆராதானையும் மாலை விளையாட்டு நிகழ்வுகளும் அங்கு நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் குருமட மாணவர்கள், குருக்கள், அருட்சகோதர்கள் ஆசிரியர்களென பலரும் கலந்து சிறப்பித்தனர்.

● யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றி இறந்த ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவிகளை நினைவு கூர்ந்து ஒப்புக் கொடுக்கப்பட்ட சிறப்புத் திருப்பலி கார்த்திகை 14 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடை பெற்றது.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேர-ருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிர-காசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், குருமட மாணவர்கள், இறைமக்களெனப் பலரும் கலந்து இறந்தவர்களை நினைவு கூர்ந்து செபித்தார்கள்.

● யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட நற்கருணைப் பணியாளர்களுக்கான சிறப்பு தியானம் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் நடைபெற்றது.

பொதுநிலையினர் கழக இயக்குனர் அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இத்தியானத்தில் கிளறீசியன் துறவற சபையைச் சேர்ந்த அருட்தந்தை றொனால்ட் சுஜீவன் அவர்கள் கலந்து தியானத்தை நெறிப்படுத்தினார். பல பங்குகளிலும் பணியாற்றும் நற்கருணைப் பணியாளர்கள் இத் தியானத்தில் கலந்து பயனடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழுதுகளுக்கு வேர்களின் அஞ்சலி

10. யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ் அவர்கள் 10.06.2022 அன்று இறையடி சேர்ந்தார். இவர் மன்னார் மறைமாவட்டத்திலும் அளப்பரிய பணிகள் ஆற்றியுள்ளார். யாழ் மறைமாவட்டத்தில் சிறிய குருமட அதிபராகவும், யாழ் கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராகவும், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பின்னர் யாழ். பல்கலைக் கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் தலைவராகவும் முதுநிலை விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

11. போர்டோவின் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி டானியலா சவரிமுத்து 08.06.2022 அன்று யாழ்ப்பாணத்தில் இறைபதமடைந்தார்.

12. திருச்சிலுவை துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி டொறத்தி பிலிப் அவர்கள் 03.06.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

13. இலங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி லொறின்ரா 24.05.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் பாசையூர் பங்கைச் சேர்ந்தவரும் பாகிஸ்தான் குவேற்றா மறைமாவட்டத்தின் முன்னைநாள் ஆயருமாகிய அமரர் பேரருட்திரு விக்டர் ஞானப்பிரகாசம் அவர்களின் சகோதரியுமாவார்.

14. இலங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபையைச் சேர்ந்தவரும் யாழ் உரும்பிராய் பங்கின் முதல் அருட்சகோதரியுமாகிய செபமலர் அவர்கள் 19.04.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் இலங்கையின் பல பாகங்களிலும் பங்குப் பணி கல்விப்பணி ஆற்றினார்.


15. இலங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி றோசலின் அவர்கள் 03.04.2022 அன்று இறையடி சேர்ந்தார். இவர் 44 வருடங்களாக தம் துறவற வாழ்வினூடாக இலங்கையின் பல பாகங்களிலும் பங்குப் பணியும் கல்விப் பணியும் ஆற்றியுள்ளார்.

16. திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை நிதிதாசன் அவர்கள் 01.03.2022 அன்று வாகன விபத்தொன்றில் அகாலமரணடைந்து இறையோடு இணைந்தார். இவர் திருகோணமலை எகட் கரித்தாஸ் நிறுவன முன்னாள் இயக்குனராகப் பணியாற்றியதோடு, சிறப்பான பங்குப் பணிகளையும் சமூகப் பணிகளையும் முன்னெடுத்தவர்.

17. போர்டோவின் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி திரேசியா பத்திநாதன் அவர்கள் 15.11.2021 அன்று இறையடி சேர்ந்தார்.

19. யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த மூத்த துறவிகளில் ஒருவரான அருட்திரு எட்மன் மைக்கல் அடிகளார் 13.11.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். தனது குருத்துவ வாழ்வில் 50 வருடங்களுக்கு மேலாக யாழ். மன்னார் மறைமாவட்டங்களில் பங்குப் பணி கல்விப்பணியாற்றினார். இவர் ஒரு சிறந்த ஆங்கில ஆசானாக விளங்கியவர் என்பது குறிப்படத்தக்கது.

இவ்விறை ஊழியர்களின் ஆன்மாக்கள் ஆண்டவரில் இளைப்பாற 'வேர்கள்' செபித்துக் கொள்வதோடு தனது அஞ்சலிகளையும் செலுத்தி, அனுதாபங்களையும் பகிர்ந்து நிற்கின்றது.



## செய்தித் துளிகள்

● யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர் பேரருட்திரு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் நினைவாக முன்னெடுக்கப்பட்டு வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற ஆயர் தியோகுப்பிள்ளை நினைவுப் பேருரை ஐப்பசி 27 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் அவர்கள் கலந்து அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த கர்தினால் பெஞ்சமின் தோமஸ் கூரே அவர்களின் மேய்ப்புப்பணி மற்றும் கல்விப்பணி சார்ந்த விடயங்கள் என்ற தலைப்பில் இவ் வருடத்திற்கான நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அவர்கள் மற்றும் குருக்கள், துறவிகள் குருமட மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

● மன்னார் மறைமாவட்டத்தின் மருத்துவ தேவையை கருத்தில் கொண்டு மன்னார் ஆயர் பேரருட்திரு கலாநிதி இம்மனுவேல் ஆண்டகை அவர்களின் முயற்சியில் மன்னாரில் புதியதொரு வைத்திய சாலை உருவாக்கம் பெற்று வருகிறது. வாழ்வுதய இயக்குனர் அருட்பணி அன்ரன், அரசாங்க அதிபர் திரு. ஸ்ரான்லி டிமெல், வைத்திய அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

● யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. அருட்சகோதரர்களான ஜோன் கனிசியஸ் மற்றும் ராஜ் டிலக்சன் ஆகியோர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் அங்கு நடைபெற்ற திருச்சடங்குத் திருப்பலியில் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இத்திருப்பலியில் பலரும் கலந்து கொண்டு செபித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகூர்ந்து அஞ்சலிக்கின்றோம்

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகம் தோற்றம் பெறவும், வளர்ச்சி யடையவும் அர்ப்பணிப்புடன் பங்காற்றியவர் கள் பலர். அவர்களில் பலர் இன்று எங்களு டன் இல்லை. இறைவனுடன் இணைந்து விட்டனர். அத்தோடு இன்றும் எங்களுடன் ஆன்மீகப் பணியகத்தில் பணியாற்றிக் கொண் டிருக்கின்ற பல உறுப்பினர்களுடைய உறவு களும் இறைவனடி சேர்ந்திருக்கின்றார்கள்.

அந்த வகையில், தமிழ் கத்தோலிக்க ஆன் மீகப் பணியகத்தின் உருவாக்கத்திற்குவித் திட்டவர்களில் ஒருவரும், கென்ரன் பணித் தளத்தின் முன்னாள் இணைப் பாளருமாகிய அமரர் திரு. ஆபிரகாம் டோமினிக்.

ஆன்மீகப் பணியகத்தின் முன்னாள் உறுப்பினரும் பங்களிப்பாளருமாகிய அமரர் திரு. மரியாம்பிள்ளை பிலமின்.

தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் பங்களிப்பாளராகிய அமரர் திருமதி றூபினி ராஜ்குமார்.

எமது ஆன்மீகப் பணியகத்தின் நிதி நிர்வாகக் குழுவின் முன்னாள் உறுப்பினரும், கென்ரன் பணித்தளத்தின் முன்னாள் இணைப்பாளரு மாகிய அமரர் திரு. சதாசிவம் நாகலிங்கம் தெய்வேந்திரன்.

சௌத் என்ட் ஒன் சீ பணித்தளத்தின் உதவி இணைப்பாளர் திரு. ஜெகன் அவர்களின் அன்புத் தாயாரும் கான்ஸ்ஹில் பணித்தள இணைப்பாளர் திரு. லூக் புனிதராஜ் அவர் களின் மைத்துணியுமாகிய அமரர் திருமதி பற்றிமா றோஸ் நவரட்ணம்.

ஆன்மீகப் பணியகத்தின் நிதி நிர்வாகக் குழுவின் முன்னாள் உறுப்பினரும் சுகாதார பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு தற்போது பொறுப்பாகவுமிருக்கின்ற திரு. கபிரியேல் பிள்ளை நிமலன் அவர்களிள் அன்புத் தாயார் அமரர் திருமதி தவமணி கபிரியேல்பிள்ளை.

ஆன்மீகப் பணியகத்தின் தற்போதைய நிதி நிர்வாகக் குழுவின் பொருளாளரும் கான்ஸ் ஹில் பணித்தளத்தின் நிர்வாக உறுப்பினரு மாகிய திரு. ஜோசப் மெல்றோய் அவர்களின் பாசமிகு தாயார் அமரர் திருமதி அன்னம்மா ஜோசப்.

சௌத் ஹோல் பணித்தளத்தின் உறுப்பின ரும் ஆன்மீகப் பணியகத்தின் வழிபாட்டுக் குழு உறுப்பினர்களில் ஒருவருமாகிய திரு. அன்ரனி அவலின் அவர்களின் அன்பு மாமியார் அமரர் திருமதி றோஸ் றெஜினா சிங்கராஜர்.

ஏல்ஸ் பீல்ட் பணித்தள நிர்வாக உறுப்பின ராகிய திருமதி அமனிற்றா இம்மானுவேல் அவர்களின் அன்பு மாமியார் அமரர் திருமதி தாசன் மகேஸ்வரி. இதே பணித்தளத்தின் நிர்வாக உறுப்பினராகிய திரு. மரியதாஸ் சாமிநாதர் அவர்களின் பாசமிகு தாயார் அமரர் திருமதி மரியம்மா சாமிநாதர்.

தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் பங்களிப்பாளர்களாகிய திருமதி சாந்தினி பஸ்ரியாம்பிள்ளை அவர்களின் அருமை மாமியார் அமரர் திருமதி றூபி பெனடிக்ரா பஸ்ரியாம்பிள்ளை, திருமதி பீற்றர்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரர் அமரர் திரு மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை, திரு. பீற்றர் பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரர் அமரர் திரு. பெனடிக்ற் ஞானப்பிரகாசம் மற்றும் அவரின் மைத்துணியாகிய அமரர் திருமதி பற்றிமா ஞானப்பிரகாசம்.

கென்ரன் பணித்தளத்தின் உறுப்பினரும் ஆன்மீகப் பணியகத்தின் வழிபாட்டுக் குழு உறுப்பினருமாகிய திருமதி. விமலா இந்திரன் அவர்களின் பாசமிகு சகோதரி அமரர் திருமதி நொவிலின் மேரி.

கான்ஸ் ஹில் பணித்தளத்தின் முன்னாள் இணைப்பாளர்களாகிய திருமதி தேவராஜ் நளினி அவர்களின் அன்புத் தாயாரும், திரு தேவராஜ் அவர்களின் அன்பு மாமியாரு மாகிய அமரர் திருமதி மனோகரி பெயாற்றிஸ் மேரி வனசிங்க.

இப்பணித்தள உறுப்பினர்களாகிய திருமதி மடோனா றோசறி அருள்ராஜா அவர்களின் அன்புத் தாயார் அமரர் திருமதி மேரி பெனிக்கா அந்தோனிப்பிள்ளை, திருமதி றெனோல்டா அன்ரனிராஜா அவர்களின் அன்புத் தாயார் அமரர் திருமதி யுஸ்ரேசியா மாசிலாமணி பிரான்சிஸ்.

ஆகிய அமரத்துவமடைந்த எம் அனைத்து உறவுகளையும் சொந்தங்களையும் நன்றி யோடு நினைந்து அஞ்சலிக்கின்றோம். அவர் களது ஆன்மாக்கள் ஆண்டவரில் இளைப் பாற இறைவனின் இரக்கத்திற்காய்ப் பிரார்த் திக்கின்றோம். இவர்களின் பிரிவால் துயர டைந்துள்ள எம் உறுப்பினர்களுக்கு 'வேர் கள்' வழியாக இலண்டன் தமிழ் ஆன்மீகப் பணியகம் தன் ஆழமான அனுதாபங்களைப் பகிர்வதில் நிறைவடைகின்றது.

## ஆங்கில வளாகத்தின் இயக்குனரும் நிறுவுனருமாகிய அருட்திரு எட்வின் சவுந்தரா காலமானார்

யாழ். மறைமாவட்ட குருவும் பிரமந்தனாறு புன்னைநீராவி பிரதேசத்திலுள்ள ஆங்கில வளாகத்தின் இயக்குனரும் நிறுவுனருமாகிய அருட்திரு எட்வின் சவுந்தரா அவர்கள் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி யில் பல ஆண்டுகள் விரிவுரையாளராக பணியாற்றியுள்ளதுடன் 1995ற்கு பிற்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டுக்கு புலம் பெயர்ந்து அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் மறை மாவட்டத்தில் இணைந்து அங்கும் கற்பித்தல் பணியில் தன்னை இணைத்துக் கொண்டார். புலம்பெயர் தேசத்திலிருந்து நாடு திரும்பி வன்னிப் பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு தனது முயற்சி யினால் பிரமந்தனாறு புன்னை நீராவி பிரதேசத்தில் ஆங்கிலக் கல்விக்கூடம் ஒன்றை நிறுவி ஆங்கிலக் கல்வியை மிகச் சிறப்புறக் கற்பித்து வந்தார்.

கடந்த வருட இறுதியில் சுகவீனமுற்ற அருட் தந்தை அவர்கள் வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா நாடு சென்று அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் இறைவனடி சேர்ந் துள்ளார். இவரின் பணிவாழ்விற்காக இறை வனுக்கு நன்றிகூறி இவரின் ஆன்மா இறை வனில் இளைப்பாற செபிப்போம்.

## ஆயருக்கு அன்பான வாழ்த்துக்கள்




மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் தந்தை இம்மானுவேல் பெர்ணான்டோ அவர்கள் தமது குருத்துவ வாழ்வின் 50வது ஆண்டு யூபிலியை கடந்த 07.01.2023 அன்று கொண்டாடினார். ஆயர் அவர்களை இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் வாழ்த்தி இறையருள் வேண்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75வது பிறந்தநாள் நல்வாழ்த்து பா

## யாழ். மேதகு ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அவர்களுக்கே!



இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள்
எங்களின் ஆயர் அவர்களே!

மக்களின் ஆயர் அவர்களே!
அன்பும், அறமும்
உங்களின் இரு கண்கள்!
அருளாசியும், இறை நம்பிக்கையும்
உங்களின் தாய் தந்தையர்
உங்களுக்கு வழங்கிய முத்துக்கள்!

அரவணைப்பு, இரக்கம்,
எளிமை, தாழ்ச்சி, தட்டிக் கொடுத்தல்
தையிரியம் போன்ற
உயர் விழுமியங்கள்
உங்கள் மந்தைகளுக்கு
உங்களிடமிருந்து
சீராக கிடைக்கும் நன்மைத்தனங்கள்!

மக்களின் ஆயர் அவர்களே!
இருண்ட வானிலே
காலைக் கருக்கலிலே
கிழித்து வரும் ஒளிப்போல
பீறிட்டு வரும் ஒளிப்போல
இருள் படிந்த தேசத்திலும்
அந்நிய தேசத்திலும்
உங்களின் பீறிட்டு வரும்
நம்பிக்கையின் ஒளியில்
உங்கள் மந்தைகள்
வழி நடக்கின்றார்கள்!

ஆழ்கடல் புகுந்து மூச்சடைக்கி
முத்தெடுப்பது இலகு வென்பேன்
நம்பிக்கையின் திறவு கோல் கையில் எடுத்து
இறை சமூகம் நுழைவது கடினம் என்பேன்
ஆனால் ஆயர் அவர்களே உங்களால்
எங்களுக்கு பெருமை என்பேன்
கிருபை என்பேன்!

மக்களின் ஆயர் அவர்களே!
நேர்மையின் பாத்திரரே
நீங்கள் உடல் நல சுகத்துடனும்
நீள் ஆயுளுடனும்
இறை செங்கோல் பிடித்து வாழ
வாழிய, வாழிய பல்லாண்டு காலம்
வாழிய வாழியவே! என
வாழ்த்துகின்றோம்!

**வாழ்த்துவோர்கள்,**
அருட்தந்தை, எல்மோ ஜெயராஜா அடிகளாருடன்
லண்டன் வாழ் தமிழ் கத்தோலிக்க நம்பிக்கையாளர்கள் - UK

20-06-2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குனரின் ஆசிரியச் செய்தி



**அன்பான சகோதர சகோதரிகளே,**

ஆண்டவராகிய இயேசுவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துக்கள். நமது ஆயர் அவர்கள் நம் மத்தியில் வந்திருப்பது நமக்கு கிடைத்த ஒரு பெரிய பாக்கியம். இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

அவர் உண்மையில் நம் தமிழ் கத்தோலிக்க சமூகத்தின் ஒரு நிகரற்ற அடையாளமாகவும் ஆளுமைமிக்க மேய்பனாகவும் இருப்பது நீங்கள் அறிந்ததே.

ஆயர் எமிலியானுஸ்பிள்ளை, ஆயர் தியோகுப்பிள்ளை, ஆயர் தோமஸ் இப்போது ஆயர் ஜஸ்டின் என கடந்த பல தசாப்தங்களாக இறைமக்களை வழிநடத்தும் அற்புதமான ஆளுமைகளுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம்

வோல்சிங்கம் ஜூலை விழாவைக் கொண்டாட எங்களின் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள பேரருட்திரு ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைஅவர்களுக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்த ஆண்டு, நமது ஆயர் அவர்கள் தனது 75வது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். நம்மில் பலருக்கு அவரை யாழ்ப்பாண ஆயராக தான் என்று தெரிந்திருக்கலாம், ஆயிரக்கணக்கானோர் அவரை எனது அதிபர் என்றும் ஆசிரியர் என்றும் அழைக்கலாம். ஆனால் தனிமையுடனும், எல்லாப் பக்கங்களிலும் சிரமங்களுடனும், இறை மக்களின் துன்பங்களின் பாரத்துடனும் மிகவும் கடினமான காலகட்டங்களில் அவர் ஆற்றிய குருத்துவப்பணி பலர் அறிந்திராத ஒன்று. இவையும் அவரின் பெற்றோரின் ஒழுக்க விழிமியங்கள் நிறைந்த வளர்ப்பும் அவரது உயர்ந்த ஆளுமையை உருவாக்கின என்றால் அது மிகையாகாது. அவருடைய தலைமையின் போது நாம் வாழ்ந்து பணிபுரிவதற்க்கு நாம் மிகவும் பாக்கியம் பெற்றுள்ளோம்.

இங்கிலாந்தில் உள்ள தமிழ் கத்தோலிக்க சமூகமாக ஆயர் தந்தைக்கு முழு மனதுடன் நன்றி மற்றும் நல்வாழ்த்துக்களை தாழ்மையுடன் தெரிவித்து நிற்கின்றோம். இறைவன் ஆயர் அவர்கட்கு நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் அளிப்பாராக.

– அருட்பணி எல்மோ, இயக்குநர், ஆன்மீகப் பணியகம்

Dear brothers and sisters,

Greetings in the mighty name of the Lord Jesus. We are greatly privileged and honored to have our bishop among us today. He is a legendary icon and a legacy of our Tamil Catholic community.

We give thanks and praise to God for the magnificent personalities with which He has led our people over the past decades. From Bp. Emilianuspillai to Bp. Deogupillai, Bp. Thomas, and now Bp. Justin, they have been our shepherds, guiding us to the heart of Jesus and being the voice of the voiceless.

We are immensely grateful to His Lordship Justin B Gnanapragasam for accepting our invitation to celebrate the July feast of Walsingham. This year, His Lordship is also celebrating his 75th birthday, which is a celebration of grace and love. While many of நள may know him as the bishop of Jaffna, thousands would call him their rector and teacher. However, he is a priest who wholeheartedly dedicated himself to the call of the Most High, without reservation. He walked through the very difficult times in war-torn areas, facing loneliness, challenges from every side, and carrying the burden of suffering. These experiences, along with his strong Catholic upbringing, have shaped his towering personality. We consider ourselves privileged to live and serve under his leadership.

On behalf of the Tamil Catholic community in the UK, we wholeheartedly thank him and wish him good health and a long life.

- Fr. Elmo, Chaplain, Tamil Catholic Chaplaincy UK

## நிகழ்வின் நிழல்கள்





ஏர்ல்ட் பீட்ஸ் பணித்தள மறைக்கல்வி சிறார்களினால் கடந்த 27.10.2022 அன்று கண்காட்சி நிகழ்வொன்று ஒழுங்கமைக்கப்பட்டது. இந்நிகழ்வை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநர் அருட்பணி எல்மோ அடிகளாரும் உதவிப் பணியாளர் அருட்பணி துஸ்யந்தன் அடிகளாரும் தமது ஆசிகளுடன் ஆரம்பித்து வைத்தனர். மாணவர்களின் மறை அறிவை வளர்க்கவும் அவர்களை ஊக்ககுவித்து உற்சாகப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிக்கு மறையாசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு 'வேர்கள்' வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

Design & Layout by A.Bastian, Printed by Net Printers - UK

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org